REGISTERED AS NEWSPAPER

# உதயன்

பக்கங்கள் - 14 செய்தி: 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

சுடர் :35 கதிர் :138 பங்குனி 30ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 12 ஏப்ரல் 202

## கொரோனா தொற்று 198

கொழும்பு,ஏப்.12
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான மேலும் 8 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்

02 >



## 19 மாவட்டங்களுக்கான ஊரடங்கு 16ஆம் திகதியே தளர்த்தப்படும்!

### யாழ்ப்பாணம் உள்ளிட்ட 6 மாவட்டங்கள் தொடர்ந்து இரும்புப் பிடிக்குள்

# புத்தாண்டு தினமும் நாடு முடங்கும்

கொழும்பு, ஏப்ரல் 12

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் ஊரடங்கு உத்தரவு மறு அறிவித்தல் வரும்வரை தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

02 >

# நாடாளுமன்றத் தேர்தல் ஆணைக்குழு ஆராய்வு!

## நீண்ட இடைவெளியின் பின்னர் 21ஆம் திகதி கூடுகின்றது

யாழ்ப்பாணம், ஏப்ரல் 12
தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் நீண்ட இடைவெளியின் பின்னர் எதிர்வரும் 21ஆம் திகதி இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. நாடாளுமன்றத் தேர்தலை நடத்தும் முடிவில் ஜனாதிபதி இருப்பதால், அது தொடர்பில் இறுதி முடிவு எடுப்பதற்காக இந்தக் கூட்டம் கூட்டப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

02 >

## கௌரவ ஒளிர்வு



கொழும்பு, ஏப். 12
கொரோனா வைரஸ் இலங்கையினுள் பரவுவதைத் தவிர்ப்பதற்கு தமது உயிரைப் பணயம் வைத்து இரவு பகல் பாராது முன்னின்று செயற்பட்டுவரும் அனைவருக்கும் கௌரவமளிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் நேற்று மாலை6.45 மணிக்கு தாமரைக் கோபுரம் சிவப்பு நிறத்தில் ஒளியூட்டப்பட்டு அவ்வாறு கௌரவமளிக்கப்பட்டது.

02 >

## 20 முதல் ஊரடங்கு தளரலாம்

யாழ்ப்பாணம், ஏப். 12
எதிர்வரும் ஏப்ரல் 20ஆம் திகதியுடன் ஊரடங்கைத் தளர்த்துவது தொடர்பில் அரச உயர்மட்டம் ஆலோசித்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. இடர் அதிகமுள்ள 6 மாவட்டங்கள் தவிர்ந்து ஏனைய மாவட்டங்களில் ஊரடங்கைத் தளர்த்துவது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

02 >

## கோபுரத்தை விட உயர்ந்தவர்கள்...



## யாழில் 22 நாள்கள் மறைந்திருந்த குடும்பம்

யாழ்ப்பாணம், ஏப். 12
அரியாலையில் சுவிஸ் மதபோதகர் நடத்திய ஆராதனையில் பங்கேற்றமையை 22 நாள்களாக மறைத்திருந்த குடும்பத்தினர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர். அந்தக் குடும்ப உறுப்பினர்கள் 10பேரும் நேற்று முதல் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இந்தத் தகவலை வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

02 >

## மே 11 வரையும் பாடசாலை ‘லீவு’

கொழும்பு, ஏப்.12
இரண்டாம் தவணைக்காகப் பாடசாலை கற்றல் நடவடிக்கைகள் மே மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

02 >

## கொரோனா இறப்பு 1,07,000

வுகான், ஏப். 12
கொரோனாவால் உலக அளவில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 7 ஆயிரமாக அதிகரித்தது.

02 >

## விஸ்வரூபம் எடுக்கிறது மருத்துவர் இடமாற்றல்

### இன்று வரை காலக்கெடு இல்லையேல் போராட்டம்

யாழ்ப்பாணம், ஏப். 12
பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகர் மருத்துவர் த.குகதாசனை பதவியிலிருந்து இன்றைய தினத்துக்குள் நீக்காவிட்டால் நாளையிலிருந்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

13 >

## கொரோனாவை ஒழிப்பதில் இலங்கை, சீனா முதலிடம்

கொழும்பு, ஏப்.12
'கொவிட்19" கொரோனா வைரஸ் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் வெற்றிகண்டுவரும் நாடுகளில் இலங்கை மற்றும் சீனா முன்னணியில் உள்ளதாக சர்வதேச கண்காணிப்பு அமைப்புகள்

02 >

## ஆணின் சடலம் யாழில் மீட்பு

யாழ்ப்பாணம், ஏப்.12
யாழ்.நகர் முனியப்பர் கோவில் பகுதியில் ஆணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டது.
சுமார் 54 வயது மதிக்கத்தக்கரே இவ்வாறு

13 >

## கொரோனா தொற்று..

என்று சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.
இவர்களில் 7 பேர் ஜா எல பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும், ஒருவர் தெஹிவளையைச் சேர்ந்தவர் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,
நேற்று முன்தினம் இரவு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது 7 பேருக்கும், நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.
ஜா எல, சுதுவெல்ல பிரதேசத்தில் கொரோனா தொற்றுக்குள்ளான ஒருவர் அண்மையில் அடையாளம் காணப்பட்டிருந்தார். அவர் போதைப்பொருள் பாவனையாளராவார். அவருடன் தொடர்பைப் பேணிய சிலர் சுய தனிமைக்குட்படுமாறு அறிவுறுத்தப்பட்டனர்.
எனினும், அவர்கள் அதனைப் பின்பற்றாமல் தவிர்த்து வந்ததன் காரணமாக, சோதனை நடவடிக்கையின் மூலம் 28 பேர் கைது செய்யப்பட்டனர்.
அதன் பின்னர் அவர்கள் கடற்படைக்குச் சொந்தமான ஒலுவில் பகுதியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர். அவர்களில் 6 பேருக்குக் கொரோனா தொற்றுள்ளமை நேற்று முன்தினம் இரவு உறுதிப்படுத்தப்பட்டது.
அதேவேளை, ஜா எலவில் கொரோனாத் தொற்றுடன் முதலாவதாக அடையாளம் காணப்பட்ட நபரின் மனைவிக்கும் தொற்றுள்ளமை நேற்றுமுன்தினம் இரவு உறுதிப்படுத்தப்பட்டது. இந்நிலையில், அவரின் 7 மாதக் குழந்தைக்கும் தொற்றுள்ளமை நேற்று உறுதிப்படுத்தப்பட்டது.
ஜா எலவில் முதலாவதாக அடையாளம் காணப்பட்ட நபர் மருதானையில் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக உயிரிழந்த நபருடன் தொடர்புபட்டவராவார்.
அத்துடன் ஏற்கனவே அடையாளம் காணப்பட்ட தெஹிவளையைச் சேர்ந்த வர்த்தகருடன் தொடர்பைக் கொண்ட ஒருவரும் நேற்றுமுன்தினம் தொற்றுடன் இனங்காணப்பட்டுள்ளார்.
அதற்கமைய இலங்கையில் கொரோனா தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை, 190 இலிருந்து 198 ஆக உயர்வடைந்துள்ளது.
இதேவேளை, தொற்றுக்குள்ளாகியவர்களில் இதுவரை 54 பேர் குணமடைந்துள்ளனர். நோயாளிகளில் 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில் ஏனைய 137 பேரும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
அத்துடன் வைத்தியசாலைகளில் கொரோனா வைரஸ் தொடர்பில் கண்காணிப்பில் இருந்தவர்களின் எண்ணிக்கை 224 இலிருந்து 165 ஆகக் குறைவடைந்துள்ளது. என்றார். (க22)

## கொரோனாவை...

தெரிவித்துள்ளன.
இலங்கையின் சுகாதாரக் கட்டமைப்பு மற்றும் முன்னாயத்த ஏற்பாடுகள் மிகச் சிறப்பானதாக அமைந்துள்ளதாகவும் புகழாரம் சூட்டுகின்றனர்.
'கொவிட் 19" கொரோனா வைரஸ் தொற்றுநோய் பரவல் உலக அளவில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்ற நிலையில் அமெரிக்கா, ஐரோப்பா நாடுகள், மத்திய கிழக்கில் ஈரான் போன்ற அபிவிருத்தியடைந்த நாடுகள் அனைத்துமே மிகப்பெரிய இழப்புகளைச் சந்தித்து வருகின்றன. இந்நிலையில் பிரித்தானிய ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் பிரித்தானிய ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் ஆகியன இணைந்து முன்னெடுத்துள்ள ஆய்வொன்றின் அறிக்கை தற்போது வெளியிடப்பட்டுள்ளது.
இந்த அறிக்கையில் 'கொவிட் 19" கொரோனா வைரஸ் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் வெற்றிகண்டுள்ள நாடுகளின் பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது. இதில் இலங்கை மற்றும் சீனா ஆகிய இரண்டு நாடுகள் மட்டுமே 'கொவிட் 19" கொரோனா வைரஸ் தொற்றுநோயைக் கட்டுப்படுத்துவதில் மிகச் சிறந்த வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வரும் நாடுகளாக அவர்கள் கூறியுள்ளனர். சீனாவைப் பொறுத்த வரையில் 'கொவிட் 19" கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட முதல் தொற்றுநோயாளி இனங்காணப்பட்ட பின்னரே அவர்கள் நோயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்தனர். எனினும் சீனா இப்போது வரையில் 81 ஆயிரத்துக்கும் அதிகமான கொரோனா தொற்றுநோயாளர்களை அடையாளம் கண்டுள்ளதுடன் மூவாயிரத்துக்கும் அதிகமானவர்கள் தொற்றுநோய் காரணமாக உயிரிழந்துள்ளனர். எனினும் ஏனைய அபிவிருத்தியடைந்த நாடுகளுடன் ஒப்பிடுகையில் சீனாவின் தற்பாதுகாப்பு நடவடிக்கைகள் உயரிய மட்டத்தில் உள்ளன எனக் கூறும் அந்த ஆய்வு, இலங்கையைப் பொறுத்தவரை வேறெந்த நாடுகளும் மேற்கொள்ளாத மிகச் சரியான பாதுகாப்பு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகக் கூறியுள்ளனர். அனைத்து நாடுகளுமே கொரோனா வைரஸ் பரவ ஆரம்பித்த பின்னரே தமது நாட்டினை பாதுகாக்க நடவடிக்கை எடுத்த நிலையில் இலங்கை அவ்வாறு அல்லாது கொரோனா வைரஸ் நாட்டுக்குள் பரவ முன்னரே முன்னாயத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும், இப்போது வரையில் இலங்கையின் மருத்துவக் கட்டமைப்பு மற்றும் வைரஸைக் கட்டுப்படுத்த முன்னெடுக்கும் சுகாதார வேலைத் திட்டம் மிக உயரிய மட்டத்தில் இருப்பதாகவும் அந்த ஆய்வில் கூறப்பட்டுள்ளது. (ப)

## கௌரவ...

"சவாலான சந்தர்ப்பத்தில் அனைத்து மக்கள் மத்தியிலும் தைரியத்தை ஏற்படுத்தி, முழு உலகுக்கும் முன்னுதாரணமாக மருத்துவர்கள், தாதியர்கள் உள்ளிட்ட அனைத்து சுகாதார ஊழியர்கள், முப்படையினர், பொலிஸார் மற்றும் அனைத்துப் பாதுகாப்புத் தரப்பினர், அரச நிர்வாக பொறிமுறைக்குட்பட்ட அனைத்து அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஏனைய பல ஊழியர்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த அனைவருக்கும் மக்களினதும் நாட்டினதும் கௌரவம் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது" என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு நேற்றிரவு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளது. (த22)

## கொரோனா..

சீனாவின் வுகான் மாநகரில் கடந்த வருடத்தின் இறுதிப் பகுதியில் அவதானிக்கப்பட்டது கொரோனா வைரஸ். இந்த வைரஸால் உலகமே தற்போது பேரழிவை எதிர்கொண்டுள்ளது. அமெரிக்காவில் நேற்றுமுன்தினம் மட்டும் சுமார் 2 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர். மட்டுமல்லாமல் இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன் ஆகிய நாடுகளிலும் உயிரிழப்புக்கள் மிகமிக அதிகமாகப் பதிவாகியுள்ளன. நேற்று நள்ளிரவு 12 மணி வரையிலான நிலவரத்தின்படி கொரோனாவால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 7 ஆயிரமாக அதிகரித்தது. பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 17 லட்சத்து 50 ஆயிரமாக அதிகரித்தது. (ம)

## நாடாளுமன்றத்...

நாடாளுமன்றத் தேர்தல் ஏப்ரல் 25ஆம் திகதி நடைபெறவிருந்த நிலையில் அது ஒத்திவைக்கப்பட்டது. நாடாளுமன்றத் தேர்தலை மே மாத இறுதிப் பகுதியில் நடத்தி ஜூன் மாதம் 2ஆம் திகதிக்குள் புதிய நாடாளுமன்றம் கூட்டப்படாவிட்டால் அரசமைப்பு ரீதியான சிக்கல்கள் எழும் என்று சுட்டிக்காட்டிய தேர்தல்கள் ஆணைக்குழு, இந்த விடயத்தில் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெறுமாறு ஜனாதிபதியின் செயலருக்கு அறிவுறுத்தியிருந்தது.
நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ளத் தேவையில்லை என்று ஜனாதிபதியின் செயலர் ஆணைக்குழுவுக்குப் பதிலளித்திருந்தார். இதேவேளை, ஜனாதிபதி குறித்த தினத்தில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறாது போனால், அந்த மாவட்டங்களுக்கு புதிய தேர்தல் திகதியை ஜனாதிபதி அறிவிக்க முடியும்.
இவ்வாறானதொரு நிலையில், தேர்தல்கள் ஆணைக்குழு எதிர்வரும் 21ஆம் திகதி கூடுவதற்கு முடிவு செய்துள்ளது. அன்றைய தினம் நாடாளுமன்றத் தேர்தல் தொடர்பில் தீர்க்கமான இறுக்கமான முடிவுக்கு தேர்தல்கள் ஆணைக்குழு வரக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
இந்த மாதம் 19ஆம் திகதியுடன் கொரோனா கட்டுப்பாட்டுக்குள் வரும் என்று சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்திருந்தார். அதேபோன்று இந்த மாதம் 20ஆம் திகதியுடன் கட்டுப்பாடுகளை விதித்து ஊரடங்கை தளர்த்த அரசு யோசனை தெரிவித்திருந்தது.
இந்த நிலைமையிலேயே தேர்தல்கள் ஆணைக்குழுவின் கூட்டம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ளமை கவனத்தில் கொள்ளத்தக்கது. (ஓ,5,105)

## 20 முதல்...

கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக நாடு முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு வருகின்றது. இடர் அதிகமுள்ள பிரதேசங்களான கொழும்பு, கம்பஹா, புத்தளம், கண்டி, யாழ்ப்பாணம், களுத்துறை ஆகியவற்றில் கடந்த 24ஆம் திகதி தொடக்கம் தொடர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டு வருகின்றது. ஏனைய 19 மாவட்டங்களிலும் இடைஇடையே ஊரடங்கு தளர்த்தப்படுகின்றது.
இந்த நிலையில் தேர்தலை நடத்துவதற்கு அரசு முனைப்புக் காட்டி வருவதால், எதிர்வரும் 20ஆம் திகதியுடன் 19 மாவட்டங்களிலும் ஊரடங்கை நீக்குவதற்கு ஆலோசிக்கப்பட்டுள்ளது. ஊரடங்கு அந்த மாவட்டங்களில் நீக்கப்பட்டாலும், மாவட்டங்களுக்கு இடையிலான போக்குவரத்தை தடை செய்யவும் அத்துடன் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதிக்கவும் ஆராயப்பட்டுள்ளது. (ஓ,5)

## புத்தாண்டு...

ஏனைய 19 மாவட்டங்களுக்கும் முன்னர் 14ஆம் திகதி ஊரடங்கு நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அது இரத்துச் செய்யப்பட்டு எதிர்வரும் 16ஆம் திகதியே ஊரடங்கு நீக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
புதுப்பிக்கப்பட்ட ஊரடங்கு நடைமுறை குறித்து ஜனாதிபதி ஊடகப்பிரிவு நேற்றிரவு விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.
19 மாவட்டங்களிலும் எதிர்வரும் 16ஆம் திகதி காலை 6 மணிக்கு ஊரடங்கு நீக்கப்பட்டு அன்றைய தினம் மாலை 4 மணிக்கு மீண்டும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பதற்காகப் பிறப்பிக்கப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டம் உள்ளிட்ட நடைமுறைகள் மக்களின் நலனுக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. எனவே, ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருப்பதனால் ஏற்படும் கஷ்டங்களைப் புரிந்துணர்வுடனும் பொறுப்புடனும் பொறுத்துக்கொள்ளுமாறு அரசு மக்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது.
பொருள்களைக் கொள்வனவு செய்வதை அத்தியாவசியப் பொருள்களுடன் மட்டுப்படுத்திக் கொள்ளுமாறும், தேவையற்ற பயணங்களைத் தவிர்க்குமாறும் ஜனாதிபதி ஊடகப் பிரிவின் அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
புத்தாண்டு காலப்பகுதியில் சம்பிரதாயங்கள் மற்றும் தொடர்புகளை குடும்ப உறுப்பினர்களுடன் மட்டுமே மட்டுப்படுத்திக் கொள்ளுமாறு வேண்டிக்கொள்ளப்பட்டுள்ளது. (ஓ,5,22)

## யாழில்...

அரியாலையில் ஆராதனை நடத்திய சுவிஸ் மதபோதகருக்கு கொரோனா தொற்று ஏற்பட்டமையை அடுத்து, அந்த ஆராதனையில் பங்கேற்றோர் விவரங்களை வடக்கு மாகாண சுகாதார அமைச்சு திரட்டியிருந்தது. ஆராதனையில் பங்கேற்றபலர் தமது விவரங்களைத் தெரியப்படுத்தியிருந்தனர். அதற்கு அமைவாக அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.
வட்டுக்கோட்டையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினர் ஆராதனையில் கலந்துகொண்டமையை நேற்று வரையில் மறைத்துள்ளனர். இந்த நிலையில் அவர்கள் ஆராதனையில் பங்கேற்றமையை உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து அவர்கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஓ,5,20)

## மே 11 வரை....

கொரோனா வைரஸ் தொற்றையடுத்து நாட்டிலுள்ள பாடசாலைகள் அனைத்தும் கல்வி அமைச்சின் வேண்டுகோளுக்கிணங்க கடந்த மார்ச் மாதம் 13ஆம் திகதியிலிருந்து மூடப்பட்டிருந்தன.
இரண்டாம் தவணைக்காக ஏப்ரல் 20ஆம் திகதி மீள ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், பாடசாலைகளை மே மாதம் 11ஆம் திகதி ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்று ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.
கொரோனா வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டுவரும் வேலைத்திட்டங்களைத் தொடர்ந்தும், முன்னெடுத்து பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே பாடசாலை ஆரம்பமாகும் திகதி பிற்போடப்பட்டுள்ளது.
அதேவேளை, பல்கலைக்கழகங்களின் கல்வி நடவடிக்கையை ஆரம்பிப்பது தொடர்பில் பல்கலைக்கழக அதிகாரிகள் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்களின் இணக்கப்பாட்டுடன் தீர்மானம் எடுக்குமாறு உயர்கல்வி அமைச்சுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.
(க-22,44)

# பொதுத்தேர்தல் தொடர்பில் அரசே தீர்மானிக்க வேண்டும்

## முன்னாள் எம்.பி ருவான் விஜேவர்த்தன தெரிவிப்பு



**வவுனியா, ஏப்.12**

**பொதுத் தேர்தல் தொடர்பில் தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்திடமே காணப்படுகிறது. அந்தப் பொறுப்பை தேர்தல்கள் ஆணைக் குழுவின் தலைவர் மீது சுமத்துவது பொறுத்தமாகாது. எனவே தற்போதைய நெருக்கடியான சூழலை கவனத்திற் கொண்டு அரசாங்கம் சிறந்தொரு தீர்மானத்தை எடுக்க வேண்டும் என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ருவான் விஜேவர்த்தன கோரிக்கை விடுத்தார்.**

பொதுத் தேர்தல் உள்ளிட்ட சில விடயங்கள் தொடர்பில் நேற்று விசேட காணொலியொன்றினைப் பதிவு செய்து வெளியிட்டிருக்கும் அவர் அதில் மேலும் கூறியதாவது:

ஜனாதிபதி செயலகத்தினால் தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் பொதுத் தேர்தலை நடத்துவதற்கான தினம் குறித்து தீர்மானிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இல்லை என்றும், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவரே அதனைத் தீர்மானிக்க வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே போன்று உயர் நீதிமன்றத்தின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை இல்லை என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பந்தைக் கைமாற்றுவதைப் போன்று ஒருவரை ஒருவர் குறை கூறிக் கொண்டிருப்பது இந்தச் சந்தர்ப்பத்தில் பொருத்தமானதல்ல. அரசமைப்பின் அடிப்படையில் ஜனாதிபதிக்குச் சில பொறுப்புக்கள் உள்ளன.

எனவே தற்போது வைரஸ் தொற்றுப் பரவியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தில் பொதுத் தேர்தலை நடத்த முடியுமா என்பது பற்றி ஆராய வேண்டும். ஜனாதிபதி இது குறித்து ஆராய்ந்து சரியானதொரு தீர்மானம் எடுப்பார் என்று எதிர்பார்க்கின்றோம். அந்தப் பொறுப்பை தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மீது சுமத்துவது பொருத்தமாகாது. தேர்தலை நடத்த வேண்டிய அதிகாரம் ஜனாதிபதிக்கும் அரசாங்கத்துக்கும் இருக்கிறது. எனவே உரிய தரப்பினர் சரியான தீர்மானத்தை எடுப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

எதிர்க்கட்சி என்ற ரீதியில் நாட்டில் வைரஸ் ஒழிப்புக்காக முழுமையான ஒத்துழைப்பை வழங்கத் தயாராகவுள்ளதாக அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளோம். எனவே இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் குறுகிய அரசியல் நோக்கத்துக்காக மக்களின் கண்ணீருக்கு மத்தியில் தீர்மானங்களை எடுக்காது சிறந்ததொரு தீர்மானம் எடுக்கப்பட வேண்டும் - என்றார். (ப)

# தண்ணீர் தேவையா? உடன் அழைக்கவும்

யாழ்ப்பாணம், ஏப். 12

வேலணைப் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் குடிதண்ணீர்த் தேவை ஏற்பட்டால் உடனே அழைக்கவும் என்று சபை தெரிவித்துள்ளது. ஊரடங்கு காரணமாக மக்கள் வீட்டுக்குள் முடங்கியுள்ளனர். அவர்களுக்கு குடிதண்ணீர் மிக அவசியம். இதனைக் கருத்திற்கொண்டு சபை செயற்பட்டு வருகின்றது.

புங்குடுதீவு உப அலுவலக பகுதியிலுள்ள மக்களுக்கு இலவச குடிதண்ணீர் வழங்குவதற்குத் தயார் நிலையில் வேலணை பிரதேச சபையின் 16 ஆயிரம் லீற்றர் கொள்ளளவுடைய இரண்டு நீர்த்தாங்கிகள் மூலமாக இலவச குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளன.

புங்குடுதீவு உப அலுவலகப் பொறுப்பதிகாரியால் குடிதண்ணீர்த் தேவைப்பாடுடைய இடங்கள் இனங்காணப்பட்டு செயலாளரிடம் தெரிவிக்கப்பட்டதற்கமைவாக செயலாளரின் அனுமதியோடு குடிதண்ணீர் விநியோகம் இடம்பெறுகின்றது. புங்குடுதீவு உப அலுவலகம் மட்டுமன்றி நயினாதீவு உப அலுவலகப் பகுதியிலும் வழமையான குடிதண்ணீர் விநியோகம் வேலணைப் பிரதேச சபையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புங்குடுதீவு மற்றும் ஏனைய உப அலுவலகப் பகுதிகளில் குடிதண்ணீர் பெறுவதில் ஏதும் இடர்பாடு காணப்படின் அலுவலக நாள்களில் வேலணைப் பிரதேச சபை தொடர்பு இலக்கமான 0212211506, 0212211505 ஆகிய இலக்கங்களுடன் அலுவலக நாள்கள் தவிர்ந்த ஏனைய விடுமுறை நாள்களில் 0778065444 எனும் இலக்கமூடாகவும் பொதுமக்கள் தொடர்பு கொண்டு குடிதண்ணீர் பெறுவதிலுள்ள சிரமத்தை நிவர்த்தி செய்யமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு-7)

# வீட்டுத் தோட்டம் அமைக்க விதைகளைப் பெற்றுத் தருக

மன்னார், ஏப்.12

வீட்டுத்தோட்டங்களை அமைப்பதற்கான விதைகளைப் பெற்றுத் தருமாறு வீட்டுத்தோட்டங்கள் அமைப்பதில் ஆர்வமுள்ள மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பயிர்ச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கொரோனா வைரஸ் அச்சத்தால் அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தின் மூலம் ஏற்பட்ட உணவுத் தட்டுப்பாட்டினையடுத்து, தற்போது மன்னாரில் தோட்டப்பயிர்ச் செய்கையில் பெரும்பாலானோர் ஆர்வம் காட்டி வருகிறார்கள். ஆயினும் தமக்குத் தேவையான விதை நாற்றுக்களைப் பெற்றுக் கொள்வதில் சிரமத்தை எதிர்கொள்வதாக அவர்கள் தெரிவிக்கின்றார்கள். எனவே அரசாங்கம் அறிவித்துள்ளபடி மரக்கறி விதைகள் மற்றும் நாற்றுக்களை தருவதுடன் பயிர்ச் செய்கைக்குத் தேவையான ஆலோசனைகளையும் வழங்குமாறும் பயிர்ச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னாரின் பெருநிலப்பரப்பாக உள்ள மடு, முசலி, நானாட்டான், மாந்தை மேற்கு பிரதேசங்களில் வழமையாக தோட்டப் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டுவரும் பயிர்ச் செய்கையாளர்களும், புதிதாக தோட்டப்பயிர்ச் செய்கையில் ஈடுபட உள்ளவர்களும் இணைந்து இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளனர். (ப-213)

# முடிந்தவரை புதுவருடத்தை வீடுகளில் கொண்டாடுங்கள்

வவுனியா, ஏப்.12

நாட்டில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக, இந்த வருடம் புதுவருடத்தை வீடுகளிலேயே கொண்டாடுங்கள் என்று வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியத்தின் உப தலைவர் தெரிவித்துள்ளார்.

வீடுகளில் உள்ள பொருள்களைப் பயன்படுத்தி மருத்து நீரைத் தயாரித்து, கோவில்களுக்கு வருவதைத் தவிர்த்து இயன்றவரை பாதுகாப்பான முறையில் உங்கள் இஷ்ட தெய்வங்களை வழிபட்டு மகிழ்வுடன் புதுவருடத்தைக் கொண்டாடுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை கோவில்களுக்குச் செல்பவர்கள், தங்களுடையதும் சமூகத்தினுடையதும் நலனைக் கருத்தில் கொண்டு முகக் கவசங்களை அணிவதுடன், கோவில்களில் சமூக இடைவெளியைப் பின்பற்றுமாறும் அவர் கோரியுள்ளார். (சு-110)

# கடமைக்கு இடையூறு: இளைஞர் கைதானார்

வவுனியா, ஏப்.12

அரச உத்தியோகத்தரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமை, கிராம சேவகருக்கு உயிர்அச்சுறுத்தல் விடுத்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் வவுனியா பொலிஸாரால் நேற்றுக் கைது செய்யப்பட்டார். வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் தற்காலிகமாக வசிக்கும், 26 வயதுடைய இளைஞனே பொலிஸாரால் கைது செய்யப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குருமன்காட்டில் வாடகை வீட்டில் தங்கியுள்ள குறித்த இளைஞன், சமனன்குளம் கிராம சேவகரிடம் சென்று ஊரடங்கு வேளையில் வெளியில் சென்று வியாபாரம் செய்வதற்கு வாகனத்துக்குரிய அனுமதிப் பத்திரத்தைத் தருமாறு கோரி முரண்பட்டுள்ளார். அதற்கு கிராம சேவகர் மறுக்கவே அவர் பிரதேச செயலகத்துக்குச் சென்றும் அனுமதி பத்திரம் தருமாறு முரண்பட்டுள்ளார். குறித்த இளைஞன் தனது கடமைக்கு இடையூறு செய்தமை தொடர்பாக சமனன்குளம் கிராம சேவகரால் வவுனியா பொலிஸ் நிலையத்துக்குத் தகவல் வழங்கப்பட்டது.

இதனையடுத்து வவுனியா குற்றத்தடுப்புப் பொலிஸாரால் இளைஞன் கைது செய்யப்பட்டார். சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (சு-110)

# வீடு வீடாகச் சென்று வட்டியில்லா கடன்

மட்டக்களப்பு, ஏப்.12

மட்டக்களப்பு, ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவிலுள்ள மக்களுக்கு சமுர்த்தி வங்கியால் வீடுவீடாகச் சென்று நேற்றைய தினம் வட்டியில்லாக் கடன் தொகை வழங்கப்பட்டது.

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவின் சிந்தனைக்கமய 'சஹன பியவர' சமுர்த்தி முற்பணக் கடன் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழே இந்த வட்டியில்லாக் கடன் வழங்கப்பட்டது.

பிரதேச செயலாளர் திருமதி. நிஹாரா மௌஜூத் வழிகாட்டலில்அடிப்படையில் ஓட்டமாவடி சமுர்த்தி வங்கியால் ஓட்டமாவடி பிரதேச செயலக பிரிவிலுள்ள 8 கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்தி பெறும் மக்களுக்கு இவ்வாறு கடன் வழங்கி வைக்கப்பட்டது.

ஓட்டமாவடி பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், கிராம அலுவர்கள் ஆகியோர் மக்களுடைய வீடு வீடாகச் சென்று கடன்களை வழங்கி வைத்தனர்.

ஓட்டமாவடிப் பிரதேச செயலக பிரிவில் 'சஹன பியவர' சமுர்த்தி முற்பணக் கடன் வழங்கும் வேலைத் திட்டத்துக்கமைய 5ஆயிரம் ரூபா வீதம் இதுவரை 3ஆயிரத்து 439 பயனாளிகளுக்கும், 'சஹன அருநெலு' சமுர்த்தி முற்பணக் கடன் வழங்கும் வேலைத் திட்டத்திற்கமைய 5 ஆயிரம் ரூபா வீதம் 978 பேருக்குமாக 4 ஆயிரத்து 417 சமுர்த்தி பயனாளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ளதாக உதவிப் பிரதேச செயலர் ஏ.சி. அப்கர் தெரிவித்தார். (ப-150)

# திட்டமிட்டபடி ஓகஸ்ட் மாதம் உயர்தரப் பரீட்சை நடைபெறும்!

## பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித உறுதி

**கொழும்பு, ஏப். 12**

**கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை திட்டமிட்ட அடிப்படையில் ஓகஸ்ட் மாதம் நடைபெறும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் சனத் பூஜித நேற்றுத் தெரிவித்தார்.**



ஓகஸ்ட் மாதம் உயர்தரப் பரீட்சையை நடத்த முடியாமல் போனால் எடுக்கப்படும் மாற்று நடவடிக்கை என்னவென்று கேட்டபோது அவர் மேலும் தெரிவித்ததாவது:

“ஓகஸ்ட் மாதம் உயர்தரப் பரீட்சை நடத்தப்படும் என்ற தீர்மானத்தையே அரசு எடுத்துள்ளது. அந்தக் காலப் பகுதியை மையப்படுத்தியே எமது பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படாத வகையிலேயே பரீட்சைகள் நடத்தப்படும். பாட விடயதான எல்லை, உள்ளடக்கப்படவேண்டிய வினாக்கள் தொடர்பில் தற்போது கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. பேராசிரியர்கள் உள்ளடங்கலாக புத்திஜீவிகள் குழு ஆராய்ந்து வருகின்றது.

உயர்தரப் பரீட்சைக்கு முதற் தடவை தோற்றும் மாணவர்களுக்கு குறிப்பிட்டளவு பாட அளவைப் பூர்த்திசெய்ய முடியாமல் இருக்கும். எனினும், இரண்டாம், மூன்றாம் தடவைகள் தோற்றுபவர்களுக்கு பாடத்திட்டத்தை முழுமையாகப் பூர்த்திசெய்வதற்குரிய வாய்ப்பு இருந்திருக்கும்.

‘இஸட் ஸ்கோர்’ அடிப்படையிலேயே பல்கலைக்கழகத்துக்கான தேர்வு இடம்பெறுகின்றது. இதன்போது முதற் தடவை தோற்றியவர்கள், இரண்டாம் தவணை தோற்றியவர்கள், மூன்றாம் தவணைப் பரீட்சை எழுதியவர்கள் என்பது கவனத்தில் எடுக்கப்படாது. இதன் காரணமாகவே மாணவர்களுக்கு அநீதி இழைக்காத வகையில் தீர்மானங்களை எடுக்குமாறு கல்வி அமைச்சால் ஆலோசனை வழங்கப்பட்டது.

கடந்த வருடம் ஏப்ரலில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களின்போதும் மாணவர்களுக்கு அநீதி ஏற்பட்டது. இது உட்பட மேலும் பல காரணிகளைக் கருத்திற்கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டது.” - என்றார். (த-44)





# மருத மரக் கடத்தல் நேற்று முறியடிப்பு

மட்டக்களப்பு, ஏப்.12

கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சந்தியாற்றுப் பகுதியில் சட்டவிரோதமாக இடம்பெற்ற மருத மரக்கடத்தல் சம்பவம் ஒன்று பொலிஸாரால் முறியடிக்கப்பட்டுள்ளது.

கிரான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட சந்தியாற்றுப் பகுதியில் வைத்து வாழைச்சேனை விசேட அதிரடிப் படையினரால் சம்பவம் முறியடிக்கப்பட்டது.

அக்குரணைப் பகுதியில் இருந்து ஓட்டமாவடிப் பிரதேசத்துக்குச் சட்டவிரோதமாக மரங்கள் கொண்டுவரப்பட்ட நிலையில் வாழைச்சேனை கடதாசி ஆலை இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று சம்பவத்தை முறியடித்துள்ளனர். மருத மரங்களைக் கடத்தியவர்கள் மரத்தை சந்தியாற்றில் போட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏழு அடி நீளம் கொண்ட ஐந்து மருத மரங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப் படையினர் தெரிவித்தனர். தப்பிச் சென்ற நபர்கள் தொடர்பான விசாரணைகளை இராணுவப் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் விசேட அதிரடிப் படையினர் மேற்கொண்டு வருகின்றனர். (ப-150)

# உதவிகள் என்ற பெயரில் மன்னாரில் மதமாற்றம்

## பாஸ்டர் எச்சரித்து அனுப்பப்பட்டார்
## மக்களே! அவதானம் என்று அறிவுறுத்து

மன்னார், ஏப். 12

மாந்தை கிழக்கு சிறாட்டிகுளம் கிராம அலுவலர் பிரிவில் தற்போதைய இக்கட்டான நிலையில், வறுமையைப் பயன்படுத்தி மதமாற்றம் செய்ய முயற்சித்தார் என்று கூறப்படும் பாஸ்டர் அங்குள்ளவர்களால் எச்சரித்து அனுப்பப்பட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மன்னாரில் ஊரடங்கு தளர்த்தப்பட்ட வேளையில் அந்தப் பாஸ்டர் இந்தச் செயலில் ஈடுபட்டிருந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

அது பற்றி மக்கள் அந்தப் பகுதி கிராம அலுவலருக்கு தெரியப்படுத்தியுள்ளனர். அதன் பின்னர் அந்தப் பாஸ்டர் எச்சரித்து அனுப்பப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போதைய சூழ்நிலையில், யாராவது மக்களுக்கு உதவ விரும்பினால் குறித்த பகுதி கிராம அலுவலர் ஊடாக உதவுங்கள். சிலர் உதவும் பெயரில் மதமாற்றம் செய்யும் திருவிளையாடல்களை அரங்கேற்றவே செல்கின்றார்கள் என்பது தெரியவருகின்றது. எனவே மக்கள் சிந்தித்துச் செயற்பட வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகின்றனர்.

யாராவது இத்தகைய செயற்பாடுகளைச் செய்ய முற்பட்டால் பிரிவுக்குப் பொறுப்பான கிராம அலுவலருக்கு அறிவியுங்கள். தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (த-222)

# தொற்றாளர்களுடன் நேரடியாக தொடர்பு

## 52 பேர் தனிமைப்படுத்தல்

கொழும்பு,ஏப்.12

கொரோனா வைரஸ் தொற்று இருப்பதாக அடையாளம் காணப்பட்டவர்களுடன், நேரடித் தொடர்பில் இருந்த 52 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஜா எலப் பகுதியில் தேடுதல் நடத்திய கடற்படையினர், குறித்த 52 பேரையும் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைத்தனர். 41 ஆண்கள், 5 பெண்கள் மற்றும் 6 சிறுவர்கள் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஜாஎலப் பகுதியில் கொரோனாத் தொற்றாளர்களுடன் தொடர்பில் இருந்த மேலும் பலரைத் தேடும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன என்று கடற்படையினர் தெரிவித்துள்ளனர். (க-22)



# வீதிக்கு இறங்கினர் மன்னாரில் மக்கள்

மன்னார், ஏப். 12

மன்னார் காற்றாலை மின்சக்தி உற்பத்தி வேலைத்திட்டத்துக்கு கனரக வாகனங்களில் பொருள்கள் கொண்டுவரப்பட்ட போது , வெளிமாவட்டக்காரர்கள் தமது பகுதிக்குள் வரக்கூடாது என்று மக்கள் நேற்று வீதியில் இறங்கிப் போராட்டத்தில் குதித்தனர். மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி, நடுக்குடா பகுதியில் இந்தக் காற்றாலை உள்ளது.

கொரோனா பரவல் காரணமாக மின் உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தது. ஆனால் நேற்று அதிகாலை கனரக வாகனங்களில் அங்கு பொருள்கள் கொண்டு வரப்பட்டன. அவற்றைக் கொண்டு வந்த சுமார் 15 க்கும் மேற்பட்டவர்கள் குறித்த பகுதியில் நடமாடித் திரிந்துள்ளனர்.

இதனை அவதானித்த மக்கள், தங்களின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு வருவதைத் தடுக்கக்கோரி நடுக்குடாப் பகுதியில் எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

பொலிஸாரும், இராணுவத்தினரும் சம்பவ இடத்துக்கு வந்து பொலிஸ் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ளமையால் வீதியில் மக்களை ஒன்று கூட வேண்டாம் என்றும் உரிய அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்துமாறும் கோரினர்.

மன்னார் பிரதேச செயலாளர் குறித்த பகுதிக்கு வந்து மக்களின் கருத்துக்களைக் கேட்டறிந்தார்.

மக்களைப் பாதிக்கின்ற வகையில் தவறாக முன்னெடுக்கப்படுகின்ற எந்த வேலைத்திட்டத்துக்கும் அனுமதி வழங்கமாட்டோம் என்று பிரதேச செயலர் தெரிவித்தார். அவருடைய வேண்டுகோளுக்கு அமைவாக மக்கள் அங்கிருந்து சென்றனர். (த-56)

# பொலிஸ் அதிகாரிகளுக்கு 5ஆயிரம் ரூபா வெகுமதி

கொழும்பு, ஏப்.12

நாட்டில் உள்ள அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் 5 ஆயிரம் ரூபா வெகுமதியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக கடந்த மார்ச் 11ஆம் திகதியிலிருந்து ஏப்ரல் 10 ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் உயிர் அச்சுறுத்தலுக்கு மத்தியில் அர்ப்பணிப்புடன் பொலிஸார் செயற்பட்டமையினைக் கருத்திற் கொண்டே இந்த வெகுமதியை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதன்படி பொலிஸ் மா அதிபரால் அனுமதிக்கப்பட்ட குறித்த பணத்தொகையை வழங்குவதற்காக மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபருக்கு தேவையான ஆலோசனையும் வழங்கப்பட்டுள்ளதுடன் பிரதான பொலிஸ் பரிசோதகர் மற்றும் அவருக்கு கீழ் பதவியில் உள்ள ஒவ்வொரு அதிகாரிகளுக்கும் இந்த வெகுமதியினை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)

# வெளிநாட்டுப் பணத்தை வைப்பிலிட புதிய கணக்கு

## ஜனாதிபதி ஊடகப் பிரிவு தகவல்

கொழும்பு, ஏப். 12

**நாட்டினுள்ளும் நாட்டுக்கு வெளியேயும் உள்ள அனைத்து இலங்கையர்களுக்கும் தனிப்பட்ட வெளிநாட்டுப் பணத்தைச் சம்பாதிப்பதற்கும், சேமிப்பதற்கும் முதலிடுவதற்கும் தாம் விரும்பிய வங்கியொன்றில் வைப்பிலிடுவதற்கும் புதிய வங்கிக் கணக்கொன்று தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. அது 'விசேட வைப்புக் கணக்கு' என்று பெயரிடப்பட்டுள்ளது. புதிய கணக்கு தற்காலிக அல்லது நிலையான வைப்புகளை செய்யக்கூடியதாகவுள்ளது என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.**

நாட்டினுள்ளும் நாட்டுக்கு வெளியேயும் வாழும் இலங்கையர்களும் இரட்டைப் பிரஜாவுரிமையுள்ளவர்களும் ஏனைய நாடுகளில் வசிக்கும் இலங்கைப் பூர்வீகத்தைக் கொண்டவர்களும் இலங்கைக்கு வெளியே வேறு நாடுகளில் தாபிக்கப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்ட நிதியங்கள், வியாபார நிறுவனங்கள் மற்றும் கம்பனிகளும் மற்றும் இலங்கையின் அபிவிருத்தியை விரும்பும் எந்த ஒருவரும் தாம் விரும்பிய வங்கியொன்றில் விசேட வைப்புக் கணக்கைத் திறக்க முடியும்.

நிதி, பொருளாதார மற்றும் கொள்கை வகுப்பு அமைச்சு ஏப்ரல் 8ஆம் திகதி அரச அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவித்தலில் புதிய வைப்பு சம்பந்தமான சட்டதிட்டங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இலங்கைக்கு வெளியே வெளிநாட்டுப் பண வைப்பு அல்லது முதலீட்டைப் பேணி வரும் அனைத்து இலங்கை வர்த்தக சமூகத்துக்கும், கம்பனி உரிமையாளர்களுக்கும் இலங்கையின் நலனில் அக்கறை கொண்ட அனைவருக்கும் தமது வங்கிகளுக்கு அறிவுறுத்தல் வழங்கி தம்மிடமுள்ள நிதியங்களின் ஊடாக இலங்கைக்குப் பணம் அனுப்ப முடியும்.




புதிய கணக்கில் வைப்பிலிடக்கூடிய பணத்தின் அளவுக்கு ஆகக் குறைந்த எல்லை இல்லை. வைப்பொன்றுக்கான குறைந்த காலம் 06 மாதங்களாகும். சாதாரண வெளிநாட்டுப் பண வைப்புக்கு வழங்கப்படும் வட்டியைப் பார்க்கிலும் அதிக வட்டி வீதம் வைப்புகளுக்கான தவணை முடிவில் வழங்கப்படும். அந்த வகையில் 06 மாத விசேட வைப்புக் கணக்குக்கு ஒரு வீதமும் 12 மாத வைப்பொன்றுக்கு 2 வீதமும் அதிக வட்டி உரித்தாகும். வைப்புகளின் தவணை முடிவில் அதிலுள்ள பணத்தை தடையின்றி வேறு நிதிக்கு மாற்றுவதற்கும் இலங்கைக்கு வெளியே எடுத்துச் செல்வதற்கும் அனுமதி உள்ளது.

அனைத்து வைப்புகளும் வரி மற்றும் அந்நியச் செலாவணிச் சட்டதிட்டங்களில் இருந்து விலக்களிக்கப்படும். வைப்புகளுக்கு வங்கியின் இரகசிய ஏற்பாடுகளின் கீழ் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.

கணக்கு உரிமையாளர்களுக்கு கிடைக்கும் அதிக நன்மைகள் மற்றும் அதற்கான சட்ட ஏற்பாடுகள் 2020 வரவு - செலவுத்திட்ட ஆவணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலர், யூரோ, ஸ்ரேலிங் பவுண், ஆஸ்திரேலிய டொலர், சிங்கப்பூர் டொலர், சுவீடன் குரோனர், சுவிஸ் பிராங்க், கனடா டொலர், ஹொங்கொங் டொலர், ஜப்பான் யென், டென்மார்க் குரோனர், நோர்வே குரோனர், சீன ரென்மின்பி மற்றும் நியூசிலாந்து டொலர் என்பன விசேட கணக்குக்கு ஏற்றுக்கொள்ளப்படும் பணங்களாகும்.

விசேட வைப்புக் கணக்கு குறித்த மேலதிக விவரங்களை ஜனாதிபதி அலுவலகம், நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி அல்லது இலங்கையின் தூதுவராலயங்களின் இணையத்தளங்களின் ஊடாகப் பெற்றுக்கொள்ள முடியும்.

கொவிட் 19 நிவாரண, சமூகப் பாதுகாப்புக்கு உதவும் வகையில் இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ளுமாறு இலங்கையின் அபிவிருத்தியில் அக்கறைகொண்ட அனைத்து இலங்கையர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (த)





# கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகை


## சந்தேக நபர்கள் தப்பியோட்டம்

மட்டக்களப்பு, ஏப்.12

கசிப்பு உற்பத்தி செய்யப்படும் ஆற்றுப் பகுதி ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கு கசிப்புக் காய்ச்சுவதற்குப் பயன்படுத்தப்பட்ட உபகரணங்களை மீட்டுள்ள சம்பவம் வவுணதீவில் நேற்று இடம்பெற்றுள்ளது.

பொலிஸார் வருவதை எப்படியோ அறிந்து கொண்ட சந்தேக நபர்கள் அங்கிருந்து தப்பித்துச் சென்ற நிலையில், 15 பரல்கள், 150 லீற்றருக்கு மேற்பட்ட கசிப்பு, 5 மோட்டார் சைக்கிள்கள் என்பன பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன என்று வவுணதீவுப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நிசாந்த ஹப்புகாமி தெரிவித்தார். பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவல் ஒன்றுக்கமையவே வவுணதீவு பெரும் குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கசிப்பு உற்பத்தி செய்யுமிடம் முற்றுகையிடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை கடந்த சில தினங்களுக்கு முன்னரும் பொலிஸார் கசிப்பு உற்பத்தி நிலையங்கள், விற்பனை நிலையங்களை முற்றுகையிட்டிருந்தனர். அந்தச் சம்பவங்களில் இதுவரை 17 பேரை கைது செய்யப்பட்டுள்ளனர். (ப)



# முகக்கவசம் கட்டாயம்

## பளையில் அறிவிப்பு

பளை, ஏப். 12

வீட்டுக்கு வெளியே செல்வோர் முகக்கவசம் அணிந்து செல்லுமாறு பளைப் பிரதேச செயலக ஏற்பாட்டில் பளைப் பொலிஸார் நேற்று ஒலிபெருக்கி மூலம் அறிவித்துள்ளனர்.

கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து வரும் அபாய நிலை காணப்படுவதால் மக்கள் வெளியில் செல்லும் வேளைகளில் முகக்கவசம் அணிந்து ஒத்துழைப்பு வழங்குமாறும் முகக்கவசம் இன்றி காணப்படுவோர் முதல் தடவை எச்சரிக்கை செய்யப்பட்டு திருப்பி அனுப்பப்படுவர் எனவும் இரண்டாவது தடவை காணப்படின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர் என்றும் பொலிஸார் அறிவித்துள்ளனர். (த-9)

# மஞ்சளுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டை தளர்த்துக

கொழும்பு, ஏப்.12

இலங்கையில் சமையலுக்கு முக்கிய இணைப்பொருளாக சேர்க்கப்படும் மஞ்சளுக்கான இறக்குமதிக் கட்டுப்பாட்டைத் தளர்த்துமாறு கோரப்பட்டுள்ளது. அத்தியாவசிய உணவுப் பொருள்கள் இறக்குமதி வர்த்தக சம்மேளனம் இந்தக்கோரிக்கையை அரசாங்கத்திடம் முன் வைத்துள்ளது.



மாதம் ஒன்றுக்கு இலங்கையில் 400,000 கிலோகிராம் கேள்வி மஞ்சளுக்கு இருப்பதாக சம்மேளனத்தின் தலைவர் ஜி.ராஜேந்திரன் தெரிவித்துள்ளார். முன்னதாக உள்ளூர் மஞ்சள் உற்பத்தியை மேம்படுத்தும் முகமாக அரசாங்கம் அதன் இறக்குமதிக்குக் கட்டுப்பாட்டை விதித்தது. எனினும் உள்ளூர் உற்பத்தியை வைத்துக்கொண்டு நுகர்வோருக்கான கேள்வியைப் பூர்த்தி செய்யமுடியாமல் உள்ளதாக ராஜேந்திரன் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ப)

# சித்திரைப் புத்தாண்டுடன் தாவடிக்கு விடுதலை!!

## சுயதனிமைப்படுத்தப்பட்டோரும் அன்றைய தினம் விடுவிப்பு

வடக்கு மாகாணத்தில் சுய தனிமைப்படுத்தப்பட்டிருந்த 319 பேரும் நாளை மறுதினம் திங்கட்கிழமை புதுவருடத்துடன் விடுவிக்கப்படவுள்ளனர். அத்துடன் 'லொக்டவுன்' செய்யப்பட்டிருந்த தாவடிக் கிராமும் அன்றைய தினம் விடுவிக்கப்படவுள்ளது. இவ்வாறு வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ்ப்பாணத்தில் முதலாவது கொரோனா நோயாளி தாவடிக் கிராமத்தில் அடையாளம் காணப்பட்டார். அதனையடுத்து தாவடிக் கிராமம் இராணுவத்தினரின் துணையுடன் முடக்கப்பட்டது. மேலும், அரியாலையில் ஆராதனை நடத்திய சுவிஸ் மதபோதகருடன் தொடர்புடைய அல்லது அவரது ஆராதனைக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் என்ற அடிப்படையில் வடக்கு மாகாணம் முழுவதும் 319பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர். இவர்கள் அனைவரும் 14 நாள்கள் தனிமைப்படுத்தலின் பின்னர் கடந்த 6ஆம் திகதி விடுவிக்கப்பட இருந்தனர். ஆனாலும், காங்கேசன்துறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தவர்களுக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதையடுத்து, இவர்களின் விடுவிப்பு பிற்போடப்பட்டது.

இந்த நிலையில் 21 நாள்களின் பின்னர் அவர்கள் தனிமைப்படுத்தலிருந்து விடுவிக்கப்படவுள்ளனர். அதேபோன்று தாவடிக் கிராமமும் விடுவிக்கப்படவுள்ளது. வடக்கில் தனிமைப்படுத்தப்பட்டிருந்தவர்களுக்கு கடந்த சில நாள்களாக கொரோனா தொற்றுச் சோதனை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அவர்களில் எவருக்கும் கொரோனா தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த நிலையிலேயே விடுவிப்புக்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை காங்கேசன்துறையில் தற்போது தனிமைப்படுத்தப்பட்டுள்ள 14 பேருக்கும் விரைவில் மீண்டும் கொரோனா தொற்றுச் சோதனை மேற்கொள்ளப்படவுள்ளது, என்றார். (ஒ.5)

# பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண விநியோகம்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

முல்லைத்தீவு, ஏப். 12

தற்போதைய சூழ்நிலையில் முல்லைத்தீவு மாவட்டத்தில் பாதிக்கப்படுவோருக்கு நிவாரணங்கள் வழங்கப்படுகின்றன என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் தெரிவித்தார்.

மாவட்டச் செயலகத்தில் இன்று நடந்த ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"முல்லைத்தீவு மாவட்டத்தில் வெளிநாடுகளிலிருந்து வந்து தனிமைப்படுத்தப்பட்டவர்களில் 128 பேர் தனிமைப்படுத்தப்பட்டு குறித்த காலம் நிறைவடைந்த பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர். அதேபோல் வெளிமாவட்டத்திலிருந்து வருகைதந்தவர்கள் 660 பேரும், யாழ்ப்பாணத்தில் மதபோதகரின் வழிபாட்டுக்குச் சென்றவர்களும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இதன்போது பாதிக்கப்பட்டோருக்கு உதவிகள் வழங்கப்படுகின்றன.


வயோதிபர்கள் 4ஆயிரத்து 181 பேருக்கு 20.9 மில்லியன் ரூபாவும், மாற்றுத்திறனாளிகள் 2ஆயிரத்து 667 பேருக்கு 13.33 மில்லியன் ரூபாவும், சிறுநீரக நோயாளர்கள் 926 பேருக்கு 4.63 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளன.

சமுர்த்தி மாதாந்தக் கொடுப்பனவு பெறுகின்றவர்களில், காத்திருப்போர் பட்டியலில் 6ஆயிரத்து 445 பேருக்கு 5ஆயிரம் ரூபாவும், சமுர்த்தி உள்ளவர்களுக்கு கடன் அடிப்படையில் பத்தாயிரம் ரூபா வழங்கும் திட்டத்தில் 24ஆயிரத்து 394 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக 5ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. சமுர்த்தி வங்கி ஊடாக 5ஆயிரம் ரூபா கடன் கொடுப்பனவுகளாக 115.5 மில்லியன் ரூபா வழங்கப்பட்டுள்ளது.

அரச சார்பற்ற நிறுவனங்கள், கோவில்கள், தன்னார்வத்தொண்டுநிறுவனங்கள் மற்றும் தனியார்கள் ஒன்றிணைந்து 7ஆயிரத்து 94 குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கியுள்ளன.

வறுமைக்கு உட்பட்டவர்களை இனம் கண்டு அவர்களுக்கான உலர் உணவு பொதிகள் பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள் ஊடாக தொடர்ச்சியாக வழங்கப்பட்டு வருகின்றன.

வெளிமாவட்டத்திலிருந்து வருகைதந்து திரும்பிச் செல்லமுடியாமல் 483 பேர் உள்ளனர். அவர்களுக்கான உதவி ஏற்பாடுகள் தொடர்பில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசப்பட்டபோதும் முடிவுகள் எடுக்கப்படவில்லை. தேசிய ரீதியில் எடுக்கப்படுகின்ற தீர்மானத்தின் அடிப்படையிலேயே மாவட்டத்தின் தீர்மானமும் அமையும்". என்றும் மாவட்டச் செயலர் தெரிவித்தார். (கு-19)



# 11 பேருக்கும் கொரோனா இல்லை

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட கொரோனாத் தொற்றுச் சோதனையில் எவருக்கும் கொரோனா தொற்று இல்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சந்தேகத்தில் சேர்க்கப்பட்டிருந்த ஒருவருக்கும், சங்கானையைச் சேர்ந்த 10 பேருக்கும் கொரோனா தொற்றுச் சோதனை நேற்று முன்னெடுக்கப்பட்டது. அவர்களுக்கு கொரோனாத் தொற்று இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக, மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார். (ஒ.5)

க.பொ.த சாதாரணதர மாணவர்களே!

# பாடத்தில் சந்தேகமா? 1377 க்கு அழையுங்கள்

தமது வீடுகளில் இருந்தவாறே கல்வி பயின்றுவரும் இவ்வருடம் க.பொ.த சாதாரணதரப் பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களின் பாடங்கள் தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்துவைப்பதற்காக விசேட தொலைபேசிச் சேவையொன்று கல்வியமைச்சால் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இவ்வருடம் க.பொ.த சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்கள் தமது வீடுகளில் இருந்தவாறே கல்வி பயின்றுவரும் நிலையில், அவர்களுக்கு ஏற்படக்கூடிய சந்தேகங்களைப் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள தொலைபேசிச் சேவையின் ஊடாகத் தீர்த்துக்கொள்ள முடியும். கல்வியமைச்சின் வேண்டுகோளுக்கு அமைவாக டயலொக் ஆசியாடா நிறுவனத்தின் தலைமையில் இலங்கை மொபிடெல் நிறுவனம், எயார்டெல் நிறுவனம், ஹட்ச் நிறுவனம், ரெலிகொம் நிறுவனம் மற்றும் லங்காபெல் ஆகிய நிறுவனங்கள் இணைந்து இந்தச்சேவை வழங்கலுக்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றன.

அதன்படி பெற்றோர் தம்மிடமுள்ள எந்தவொரு தொலைபேசிச் சேவை வழங்கலின் மூலமாகவும் 1377 என்ற இலக்கத்துக்குத் தொடர்பு கொள்வதனூடாக இந்தச்சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும். அதற்காக எந்தவொரு கட்டணமும் அறவிடப்படாது என்பதுடன், சிங்களம் அல்லது தமிழ் மொழியில் இந்தச் சேவையைப் பெறமுடியும். சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு எந்தப் படத்தில் சந்தேகம் ஏற்படுகின்றதோ, அவர்கள் 1377 என்ற இலக்கத்துக்குத் தொடர்பை ஏற்படுத்தும் பட்சத்தில் உரிய பாடத்துக்கான ஆசிரியருக்கு இணைப்பு வழங்கப்பட்டு, சந்தேகத்துக்கு தீர்வு வழங்கப்படும் என்று கல்வியமைச்சு அறிவித்திருக்கிறது. (ப)

# பூநகரியில் கடற்றொழிலில் ஈடுபட்ட சகோதரர்களை கடித்தது கடற்படை

கிளிநொச்சி, ஏப். 12

பூநகரி கடலில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த சகோதரர்கள் கடற்படையினரின் தாக்குதலில் காயமடைந்துள்ளனர். ரோர்ச் லைட்டினால் அடித்தும், வாயால் கடித்தும் காயப்படுத்தியுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த 7ஆம் திகதி இரவு 8 மணிக்கு இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. கடற்படையினரின் தாக்குதலில் காயமடைந்த ஒருவர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவன் என்று கூறப்படுகின்றது.

ஊரடங்கு நேரத்தில் கடற்றொழிலில் ஈடுபடுவதற்கான உரிய அனுமதிகளைப் பெற்று சகோதரர்கள் இருவர் கடற்றொழிலில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள் தமது முழங்கால் அளவு நீரில் அட்டை பிடித்துக்கொண்டிருந்தபோது கடற்படையினர் அங்கு வந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். பத்திநாதன் இன்பராஜ் (வயது 28), பத்திநாதன் ஜோர்ஜ் யூலியன் (வயது 25) இருவருமே கடற்படையினரின் தாக்குதலில் காயமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீட மாணவனான ஜோர்ஜ் யூலியனை கடற்படைச் சிப்பாய், 'ரோச்சினால்' தலையில் தாக்கியுள்ளார். பின்னர் அவரைக் கடித்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்ற அன்று இரவே வேரவில் மருத்துவமனைக்குச் சென்று காயங்களுக்கு மருந்து கட்டியுள்ளனர். அதன் பின்னர் கடற்படையினரால் கடிக்கப்பட்ட காயத்துக்கு ஊசி போட நேற்றுச்சென்றுள்ளனர். இதன்போது மருத்துவர் நடந்த விவரங்களைக் கேட்டுள்ளார். சகோதரர்கள் அச்சம் காரணமாக அதனை வெளிப்படுத்த முதலில் மறுத்துள்ளனர். மருத்துவர் தீவிரமாக விசாரித்ததைத் தொடர்ந்து நடந்த சம்பவத்தைக் கூறினர்.

இதனையடுத்து கடி காயத்துக்கு உள்ளானவர் கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு நோயாளர் காவு வண்டி மூலம் கொண்டு சென்று சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ.5,214)

# இளவாலை மக்களுக்கு உலர் உணவுப் பொதிகள்!

இளவாலைப் பகுதியில் 17 குடும்பங்களுக்கான உலர் உணவுப் பொருள்கள் இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலயத்தில் வைத்து வழங்கப்பட்டன.

வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினர் லயன் பா.மரியதாஸின் வேண்டுகோளுக்கிணங்க, வேலணை பிரதேச சபையின் வருமான வரிப் பரிசோதகர் லயன் சி.கௌரீசனின் ஒழுங்கமைப்பில் 10 குடும்பங்களுக்கான பொருள்கள் சிறி ஜுவல்லறி, 7 குடும்பங்களுக்கான அத்தியாவசியப் பொருள்கள் சஞ்சீவன் தேவராசா ஆகியோரின் நிதிப் பங்களிப்பில் வழங்கப்பட்டன. (ம)



**கொவிட்– 19 தொற்றுநோய் பற்றிய பயம் ஒருபுறம், வீடு மற்றும் வேலை தொடர்பான அழுத்தங்கள் மறுபுறம். எல்லாவற்றுக்கும் மேலாக இனி என்ன நடக்கப்போகின்றது என்பது தெரியாத நிச்சயமற்ற தன்மை. எல்லாம் சேர்ந்து ஒரே ரென்சன் ஆக இருக்கின்றது. உங்களது ஆலோசனை என்ன?**

Dr. சா. சிவயோகன்
உள மருத்துவ நிபுணர்

# கொவிட்-19 தொற்றுநோய் பரவலினால் ஏற்பட்ட வாழ்க்கை மாற்றம்:

ஓர் அகநோக்கு 09

நீங்கள் ரென்சன் (tension) என்று ஆங்கிலத்தைப் பயன்படுத்திக் கூறும் விடயத்தை நாங்கள் நெருக்கீடு (stress) என அழைப்போம். ஒருவர் தனது பிரச்சினைகளைக் கையாள முடியாது இருக்கிறது என்று உணர்கின்ற ஒரு நிலையை நாம் நெருக்கீடு என வரையறை செய்யலாம். இன்னுமொரு வகையில் கூறுவதானால், நெருக்கீடு என்பது ஒருவருடைய அகநிலை சார்ந்த ஓர் அனுபவமாகும். எனவே, ஒருவருக்கு நெருக்கீடாக இருக்கின்ற ஒரு விடயம் இன்னுமொருவருக்கு நெருக்கீடாக இருக்காது விடலாம். அல்லது ஒருவருக்கு ஒரு நேரத்தில் நெருக்கீடாக இருந்த ஒரு விடயம் இன்னுமொரு நேரத்தில் நெருக்கீடாக உணரப்படாது இருக்கலாம். நெருக்கீடாக உணர்தல் என்பது ஒரு தனி மனித அனுபவம்.

ஆயினும், சில நிகழ்வுகள் ஒரே நேரத்தில் பலரை நெருக்கீட்டு உணர்வு நிலைக்குத் தள்ளிவிடக் கூடியனவாக இருக்கின்றன. இயற்கையான இடர்கள், மனிதரால் உருவாக்கப்படும் அழிவுகள், சமுதாய ரீதியிலான வன்முறைகள், பொருளாதாரச் சரிவுகள், தொற்று நோய்கள் போன்றன ஒரு சமூகத்தில் அழிவுகளை ஏற்படுத்தி, அதனது இயல்பு நிலையைக் குழப்பி, அந்தச் சமூகத்தில் உள்ள பல மனிதர்களை நெருக்கீட்டு நிலைக்கு உள்ளாக்கி விடுகின்றன.

நாமும் அவ்வாறான ஒரு நிலையிலேயே இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். ஒரு நூற்றாண்டு காலத்திற்குப் பின்னர் ஏற்பட்டிருக்கும் உலகளாவிய தொற்று நோய் ஒன்றின் அழிவுகளையும், அவலங்களையும் தரிசித்தபடி, அதனால் உருவாகிய கட்டுப்பாடுகளையும், மட்டுப்பாடுகளையும், வெறுமையையும், வேதனைகளையும் அனுபவித்தபடி நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தத் தொற்றுநோய் அனுபவம் என்பது மிகவும் புதியதாக இருப்பதனால், எமக்கு இதனை எவ்வாறு சமாளிப்பது என்பது தெரியாது இருக்கின்றது. எனவே இந்தச் சூழல் எமக்கு இயல்பாகவே ஒரு நெருக்கீட்டு உணர்வைத் தருகின்றது.

நெருக்கீட்டு உணர்வு என்பது ஒரு தீங்கான விடயம் இல்லை. அது இயல்பாக உருவாகின்ற ஒரு விடயம் ஆகும். நெருக்கீடு தேவைக்கேற்ற அளவுகளில் இருக்கின்ற பொழுது, அது ஓரளவுக்கு நன்மையான விளைவுகளையே ஏற்படுத்துகின்றது. ஆயினும், நெருக்கீட்டு உணர்வானது அளவுக்கு அதிகமாகின்ற பொழுது, எல்லை மீறும் பொழுது, அது எமக்குப் பல்வேறுவிதமான உடல் உள விளைவுகளை ஏற்படுத்துகின்றது. அதிக அளவுகளில் அல்லது நீண்ட காலம் இருக்கின்ற நெருக்கீட்டு உணர்வானது எமது தொழிற்படும் ஆற்றலைக் குறைக்கின்றது. சிந்திக்கும் ஆற்றலைத் திரிபடையச் செய்கின்றது. தீர்மானம் எடுக்கும் திறனைப் பாதிக்கின்றது. இன்னொருவருடன் உறவாடுதலில் சிக்கல்களை ஏற்படுத்துகின்றது. பசி, தாகம், நித்திரை, பாலியல் நாட்டம் போன்ற பல்வேறு விதமான உயிரியல் தொழிற்பாடுகளைப் பாதிக்கின்றது. உடல் உறுப்புகளினதும், தொகுதிகளினதும் தொழிற்பாடுகளில் தீங்கான மாற்றங்களை ஏற்படுத்துகின்றது. குறிப்பாக, எமது நோயெதிர்க்கும் திறனைக் குறைத்து விடுகிறது.

எனவே, ரென்சன் அல்லது நெருக்கீடாக உணர்தல் என்பதனை ஏற்படாமல் பார்த்துக் கொள்வதற்கு அல்லது அதனை ஓர் அளவோடு நிறுத்திக் கொள்வதற்கு நாம் பழகுவது நன்மையானது. அதற்காக நாம் எவ்வாறான விடயங்களைக் கடைப்பிடிக்கலாம் என்பதனை இனிப் பார்ப்போம்.

முதலில் நாம் நெருக்கீட்டு மனநிலையில் இருக்கிறோம் என்பதனை உணர்ந்து கொள்ளுதல் முக்கியமானது. நெருக்கீட்டின் பொதுவான அறிகுறிகளான கவலை, யோசனை, பதற்றம், படபடப்பு, அமைதியின்மை, சினம், சிடுசிடுப்பு, உடல் நோக்கள், தூக்கமின்மை போன்றவை ஏற்படுகின்ற பொழுது அவை எமக்கு ஏற்பட்டிருக்கும் நெருக்கீட்டின் வெளிப்பாடுகள் என்பதனை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். இவ்வாறான நேரடி அறிகுறிகளை அடையாளங்காண முடியாது விட்டாலும், ஒரு விடயத்தில் கருத்தூன்ற முடியாமை, ஞாபகசக்திக் குறைபாடு, காரணமில்லாமல் எரிந்து விழுதல், ஒரு கருமத்தைச் செய்து முடிப்பதில் வழமைக்கு மாறான சிரமங்கள் ஏற்படுதல் போன்ற எமது வழமைக்கு மாறான குறைபாடுகள் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கும் நெருக்கீட்டு நிலையின் வெளிப்பாடுகளாக இருக்கலாம் என்பதனை நாம் உணர்ந்து கொள்வது நல்லது.

நாம் நெருக்கீட்டு மனநிலையில் இருக்கிறோம் என்பதனை உணர்ந்து கொண்டதன் பின்பு, எமக்கு நெருக்கீட்டு உணர்வை ஏற்படுத்துகின்ற விடயம் எது என்பதனை உய்த்தறிய முயற்சிக்க வேண்டும். உதாரணமாக, ஒருவர் தான் இப்போது ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மணித்தியாலமும் கொவிட்-19 தொடர்பாக அறிகின்ற விடயங்களினால் மனநெருக்கீட்டுக்கு ஆளாகின்றார் என்று கூறுகிறார் என வைத்துக் கொள்வோம். இந்தப் பொதுப்படையான விளக்கம் அவர் நெருக்கீடாக உணர்வதற்குரிய சரியான காரணத்தைப் புரிந்து கொள்வதற்குப் போதுமானதாக இருக்காது. அவர் கொவிட்19 பற்றி ஒவ்வொரு கணமும், ஒவ்வொரு மணித்தியாலமும் கிடைக்கின்ற ஸ்கோர் விபரங்கள் பற்றிக் கவலைப்படுகிறாரா? இந்த வைரசுக்கு எதிரான மருந்துகள் இல்லையே என்று மனக்கிலேசம் கொள்கிறாரா? அது ஏற்படுத்தும் மரணங்களின் எண்ணிக்கை பற்றிக் கவலைப்படுகிறாரா? தானும் அந்த எண்ணிக்கையில் அடங்கி விடுவேன் என்று பயப்படுகிறாரா? இந்த மாதிரி ஒவ்வொரு நாளும் எண்ணிக்கை கூடிக்கொண்டு போனால், தானோ அல்லது தனது குடும்ப உறுப்பினர்களோ இந்தத் தொற்றினால் பாதிக்கப்பட்டுவிடலாம் என அச்சம் கொள்கிறாரா?.... இவை ஒவ்வொன்றும் வெவ்வேறானவை என்பதுவும், அவற்றிற்கான தீர்வுகள் வேறு வேறானவை என்பதுவும் வெளிப்படையானது.

எனவே, நாம் நெருக்கீடாக உணர்கின்ற பொழுதுகளில், சற்று நிதானித்து, எமக்கு அந்த நெருக்கீட்டு உணர்வை ஏற்படுத்திய காரணி அல்லது காரணிகள் பற்றி அறிய முயற்சிக்க வேண்டும். சரியான காரணங்களை அறிகின்ற பொழுதுதான், அவற்றிற்குப் பொருத்தமான தீர்வுகளைப் பற்றி நாம் சிந்திக்க முடியும். சில வேளைகளில் தனித்து யோசிக்கும்போது எமக்கு நெருக்கீட்டை ஏற்படுத்துகின்ற விடயங்கள் பற்றி எம்மால் அறியமுடியாமலும் போகலாம். அல்லது, அவ்வாறு அறிந்து கொண்டாலும், அதற்கு என்ன செய்யலாம் என்பது தெரியாது போகலாம். இப்படியான வேளைகளில்தான் நம்பிக்கைக்குரிய ஒருவரோடு மனம்விட்டுக் கதைத்தல் எனும் விடயம் அவசியமாகின்றது. அப்படியான ஒருவர் வீட்டில் அல்லது எமது நெருங்கிய வட்டத்துக்குள் கிடைக்காதபோது, அதற்கான துறைசார் பயிற்சிகளைப் பெற்ற உளவளத்துணையாளர்களை நாட வேண்டிய தேவை ஏற்படுகின்றது. எம் ஒவ்வொருவருடைய பிரதேச செயலகங்களிலும், எமக்கு அண்மையிலுள்ள உளநல சேவை வழங்கும் நிலையங்களிலும், பல அரச சார்பற்ற நிறுவனங்களிலும் இவ்வாறு துறைசார் பயிற்சிகளைப் பெற்ற, அனுபவம் வாய்ந்த உளவளத் துணையாளர்கள் இருக்கிறார்கள். தற்போதைய வீட்டில் இருப்போம் சூழ் நிலையில், தொலைபேசி மூலம் உளவளத்துணை வழங்கும் சேவைகளும் விரிவாக்கம் பெற்றிருக்கின்றன. சற்று ஆர்வத்தோடு தேடினால் இவை யாவும் எமது புலன்களுக்குப் புலப்படும்.

உளவளத் துணையாளர்கள் எமது பிரச்சினைகளை நாம் சரியாக அடையாளங் காண்பதற்கும், அதற்கான தீர்வுகளுக்கான தெரிவுகளை நாம் அறிந்து கொள்வதற்கும் உதவுகிறார்கள். அவ்வாறு தெரிந்தெடுத்த விடயங்களை அமுல்படுத்துகின்றபோது ஏற்படுகின்ற நடைமுறைப் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து, அவற்றைக் கையாளும் திறமையைப் பெற்றுக் கொள்வதிலும் உளவளத்துணையாளர்கள் உதவுவார்கள். உளவளத் துணை வழங்கும் செயற்பாட்டில் பொதுவாக ஆலோசனைகள் வழங்கப்படுவதில்லை. ஆயினும், சில மூத்த, அனுபவமிக்க உளவளத்துணையாளர்கள் பொருத்தமான தருணங்களில் ஒருசில ஆலோசனைகளை வழங்குவதுண்டு. எமக்கு நெருக்கீட்டை ஏற்படுத்தும் காரணிகளை இனங்கண்டு, அவற்றைக் கையாண்டு, பொருத்தமான தீர்வுகளை நோக்கி நகர்வது என்பது ஒருபுறமாக இருந்தாலும், மறுபுறத்தில், எமது நெருக்கீட்டிலிருந்து விடுபடுவதற்கு, அல்லது அதன் அளவைக் குறைத்துச் சமாளிக்கக் கூடிய எல்லைக்குள் கொண்டு வருவதற்குரிய முயற்சிகளையும் நாம் செய்துவருவது நன்மையானது.

நெருக்கீடுகள் அதிகமாக இருக்கின்ற பொழுது உதவக் கூடிய சில விசேட வழிமுறைகளும் எமது பண்பாட்டில் இருக்கின்றன. எமது சுவாசத்தை அவதானித்து அதனை ஆழமாகவும், மெதுவாகவும் உள்ளெடுத்து வெளிவிடும் மூச்சுப் பயிற்சிகள், உடம்பிலுள்ள ஒவ்வொரு தசைக்கூட்டத்தையும் ஓர் ஒழுங்கு முறையில் படிப்படியாகத் தளர்வடையச் செய்யும் தசைத் தளர்வுப் பயிற்சிகள், ஒரு சொல்லை அல்லது சொற்றொடரை ஒரேவிதமாகத் திரும்பத்திரும்ப உச்சரிக்கும் உச்சாடனங்கள், மனதை ஒரு விடயத்தில் குவியப்படுத்திக் கொண்டு கடைப்பிடிக்கப்படும் எளிமையான தியானப் பயிற்சிகள் போன்ற, நெருக்கீட்டு உணர்வைத் தணித்து மன அமைதியை ஏற்படுத்துகின்ற பல வழிமுறைகள் எமது பண்பாட்டில் இருக்கின்றன. அவற்றில் விருப்பமானவற்றைத் தெரிவுசெய்து, வாழ்வின் நெருக்கீட்டு வேளைகளில் மாத்திரமன்றி, சாதாரண வேளைகளிலும் கடைப்பிடித்து வருதல் மூலம் எமது உடல் உள ஆரோக்கியத்தை மேம்பாடான நிலையில் வைத்திருக்கலாம்.



நாம் எமது வாழ்க்கையை ஒரு தத்துவார்த்த நிலையோடு அணுகுவதும் பிரயோசனமானது. சமய நம்பிக்கைகள் உள்ளவர்களுக்கு அவர்களது சமயங்களில் கூறப்பட்ட பல விடயங்கள் வாழ்க்கைக்கு ஓர் அர்த்தத்தைக் கொடுப்பதுடன், வாழ்வில் நடக்கின்ற விடயங்கள் தொடர்பான ஒரு விளக்கத்தையும் கொடுக்கின்றன. சமயங்கள் தாண்டியும் தத்துவங்கள் இருக்கின்றன. ஆன்மீக ரீதியிலமைந்த பல தத்துவங்கள் இயற்கை நியதிகளையும், இயங்கியலையும் அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. அவை அண்டத்தின் ஒரு கூறாக எம்மை விளங்கிக் கொள்வதற்கும், அதிக பற்றுகள் இல்லாது வாழ்வதற்கும், கிடைத்த ஒரு வாழ்வை இயல்பாக ஏற்று மகிழ்வாக வாழ்வதற்கும் வழிகாட்டுகின்றன. சமயம், ஆன்மீகம் என்பவற்றைக் கடந்து நிற்கும் மனிதகுலத் தத்துவங்களும் இருக்கின்றன. அவ்வாறான தத்துவங்களோடு பரிச்சயத்தை ஏற்படுத்தி, அவற்றை ஓரளவுக்குத்தானும் புரிந்து எமது வாழ்க்கைக்கு ஓர் அர்த்தம் கொடுத்து, வாழ்வை ஒரு தத்துவார்த்தப் பார்வையோடு நிறைவாக வாழ்வது என்பது மிகவும் ஆனந்தமானது. வாழ்த்துக்கள்.



# தலைதெறிக்க ஓடிய சாரதிகள்

கொரோனா வைரஸ் சீனாவில் பரவத் தொடங்கியதும் இலங்கையில் அது பரவாமல் தடுப்பதற்கான நடவடிக்கையில் இறங்கியது இலங்கை அரசு.
வெளிநாடுகளில் இருந்து வருபவர்களைத் தனிமைப்படுத்தல் நிலையங்களில் 14 நாட்கள் தங்க வைத்து பரிசோதிப்பது என்பதுதான் அந்தத் திட்டம்.
இந்தத் திட்டத்தின்படி ஒருநாள், இத்தாலி மற்றும் தென்கொரியா ஆகிய நாடுகளில் இருந்து வருபவர்களை இவ்வாறு தனிமைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. விமான நிலையத்தில் இருந்து அவர்களை அழைத்து வருவதற்காகத் தயாராகின இராணுவமும் சுகாதார அமைச்சும். அதற்காக சுகாதார அமைச்சிடம் இருந்து பஸ்கள் சிலவற்றை இராணுவம் கேட்டதும் உடனே அதை வழங்கியது சுகாதார அமைச்சு. அந்த பஸ்களை எடுத்துக்கொண்டு விமான நிலையத்துக்குச் சென்றார்கள் சுகாதார அமைச்சின் சாரதிகள்.
யாரை அழைத்து வருவதற்காக அவர்கள் செல்கிறார்கள் என்று அவர்களுக்கே தெரியாது.
அங்கு சென்றதும்தான் அவர்களுக்குத் தெரிந்தது இதுதான் 'கேஸ்' என்று. சாரதிகளுக்கு ஒரே அச்சம். ஒருவேளை வருபவர்களிடம் கொரோனா இருந்துவிட்டால் தங்கள் கதை என்னாவது... உடனே பஸ்களைத் திருப்பி எடுத்துக்கொண்டு வந்துவிட்டார்கள்.இல்லை ஓடிவிட்டார்கள்.என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறினர் இராணுவத்தினர்.உடனே இராணுவத்துக்குச் சொந்தமான பஸ்களை வரவழைத்துத்தான் அந்தப் பயணிகளை ஏற்றி தனிமைப்படுத்தல் நிலையங்களுக்குக் கொண்டு சென்றார்கள் இராணுவத்தினர்.

# அங்க என்ன சத்தம்?



நாடாளுமன்றத் தேர்தல் எப்போது நடக்கும் என்று எவருக்கும் தெரியாத நிலையில் நாம் உள்ளோம். அது பற்றிய தெளிவான செய்திகளும் வருவதாக இல்லை.
அரசியல் செய்திகளில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் அரசியல் கிசுகிசுக்களில் ஆர்வம் உள்ளவர்களுக்கும் அது ஒரு பெரும் இழப்புதான்.
அவர்களுக்காக அரசியல் கிசுகிசு ஒன்றை இங்கு தருகிறோம்.
வேட்பு மனுக்களைப் பெறுவதற்கான போட்டியின்போது பல சுவாரசியமான சம்பவங்கள் இடம்பெற்றன.அவற்றுள் ஒன்றுதான் இது.
சுதந்திரக் கட்சியின் செயலாளர் தயாசிறி ஜயசேகர, துமிந்த திஸாநாயக்க மற்றும் வீரகுமார திஸாநாயக்க ஆகியோர் பத்ரமுல்லையில் அமைந்துள்ள பொதுஜன பெரமுனவின் காரியாலயத்துக்குச் சென்றனர்.
அது வேட்பு மனுவில் கையெழுத்திடுவதற்காக...
இவர்கள் வந்த வேலையை மறந்து அங்கிருந்த ஒருவருடன் வாக்குவாதத்தில் ஈடுபடத் தொடங்கினர்.
ஏன் தெரியுமா?
மஹிந்தவின் ஆட்கள் மைத்திரி தரப்பை மேடைகளில் விமர்சித்துக்கொண்டு சென்றார்கள் அல்லவா. அதற்காகத்தான்.
"பிரசன்ன ரணதுங்கவின் வாய் சரி இல்லை. தேவை இல்லாமல் எங்களை ஏசிக்கொண்டு திரிகிறார்.இதை உடன் நிறுத்த வேண்டும்.இல்லாவிட்டால் நாங்கள் பார்த்துக்கொள்வோம்."
இவ்வாறு சத்தம்போடத் தொடங்கினார் துமிந்த.
இந்தச் சத்தம் மேல் மாடியில் இருந்த பஸிலில் ராஜபக்ஸவுக்குக் கேட்டது. அப்போது அவருடன் பிரசன்னவும் இருந்தார்.
"கீழே என்ன சத்தம் என்று போய்ப் பாருங்கள் "என்று கூறி பிரசன்னவை அனுப்பினார் பஸில்.
துமிந்த ஏசுவது தனக்குத்தான் என்று தெரியாமல் கீழே இறங்கி வந்தார் பிரசன்ன.
சத்தம் கேட்கும் அந்த அறைக்குள் நுழைந்த பிரசன்ன " என்னப்பா கடும் சத்தமா இருக்கு " என்று கூறிக்கொண்டு துமிந்தவின் அருகில் அமர்ந்தார்.
" என்ன ..இன்னும் கையெழுத்திடவில்லையா "? என்று கேட்டார் பிரசன்ன.
தயாசிறியும் துமிந்தவும் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டார்களே தவிர பிரசன்னவைப் பார்க்கவும் இல்லை அவரது கேள்விக்கு பதிலளிக்கவும் இல்லை.
"மேலே பஸில் இருக்கார்.வாங்க பேசுவோம்." என்று பிரசன்ன கூறியதும் தயாசிரியும் துமிந்தவும் எழுந்து பஸிலிடம் சென்றனர். பிரசன்ன செல்லவில்லை. அந்த அறையிலேயே இருந்துவிட்டார்.
இருவரும் சென்று பஸிலுடன் பேசிவிட்டு உடனே வெளியேறிவிட்டனர். ஆனால், வேட்பு மனுவில் கையெழுத்திடவில்லை.



■ எம்.ஐ.முபாறக்

## லண்டனில் சிக்கிய அமைச்சரின் பிள்ளைகள்

இந்தக் கொரோனாவால் குடும்பங்கள் ஒன்று சேர்ந்து இருக்கும் வாய்ப்புக் கிட்டியுள்ளபோதிலும் சில குடும்பங்கள் பிரிந்தேதான் கிடக்கின்றன.
அதிலும் கொரோனாவின் தாக்குதலுக்கு அதிகம் இலக்காகியுள்ள நாடுகளில் சிக்கியுள்ளவர்களின் நிலைதான் அந்தோ பரிதாபம்.
அதிலும்,எமது அரசியல் தலைவர்களின் குடும்பங்கள், படிக்கச் சென்ற பிள்ளைகள் என என ஒரு பட்டாளமே உண்டு.
இப்போதைக்கு அந்த நாடுகளை விட இலங்கைதான் பாதுகாப்புக் கூடியது. எப்படியாவது இலங்கைக்கு வந்துவிடலாம் என்று அவர்கள் முயற்சி செய்தபோதிலும் அது முடியாமல் போய்விட்டது. விமானங்கள் வருவது தடை செய்யப்பட்டதால். அவ்வாறானவர்களுள் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமவின் பிள்ளைகளும் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாள் இரவும் தந்தையுடன் தொலைபேசிகளில் உரையாடித் தங்களின் பயத்தை போக்குகிறார்களாம் அந்தப் பிள்ளைகள்.



## அறிந்தும் அறியாமலும்

## கொரோனாச் சோதனையில் தலைவர்கள்....




கொரோனா அச்சம் சாதாரண மக்களை அவ்வளவு தூரம் தொற்றவில்லை.அரசியல்வாதிகளைத்தான் அதிகம் தொற்றியுள்ளது. அரசியலில் சுகபோகங்களைக் கண்டு அனுபவித்தவர்கள் மரணிக்க விரும்பமாட்டார்கள். நீண்ட காலம் உயிருடன் வாழ வேண்டும்.இன்னும் அரசியல் சுக போகங்களை அனுபவிக்க வேண்டும் என்பதே அவர்களின் ஒரே இலக்கு. இதனால்தான் கொரோனா அச்சம் அவர்களைத் தொற்றுயுள்ளதை அறிய முடிகிறது. அதற்கு இன்னொரு காரணமும் உண்டு. உலகில் பல நாடுகளில் அரசியல் தலைவர்கள் கொரோனாத் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர்.ஈரான் போன்ற நாடுகளில் மரணித்தும் உள்ளனர். இதனால் தங்களுக்கும் இந்த நிலை வந்துவிடுமோ என்று அஞ்சிய எமது நாட்டு அரசியல் தலைவர்கள் ரகசியமாக வைத்திய பரிசோதனை செய்து வருகிறார்கள் என்று அறிய முடிகிறது.

## மஹிந்தவைத் தடுத்தவர் இவர்தான்



இந்த முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதில்லை. தேசிய பட்டியலில் நாடாளுமன்றம் செல்வது என்ற நிலைப்பாட்டில்தான் இருந்தார் மஹிந்த. இதை பஸிலிடம் கூறிவிட்டார்.
இந்தச் செய்தியை அறிந்த பிரசன்ன ரணதுங்க அடித்துப் பிடித்துக்கொண்டு தொலைபேசி அழைப்பை எடுத்தார் மஹிந்தவுக்கு.
"சேர் அப்படியொரு முடிவை எடுக்க வேண்டாம்..இந்த முறை மக்கள் உங்களுக்கு வாக்களிக்க விரும்புகிறார்கள். உங்களுக்கு குருநாகலில் பிரச்சினை என்றால் கம்பஹாவில் போட்டியிடுங்கள். நான் போட்டியில் இருந்து ஒதுங்கிக்கொள்கிறேன்." என்றார் பிரசன்ன.
"இல்லை..இல்லை.. கம்பஹா மக்கள் உங்களை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதற்காகக் காத்துக்கொண்டு இருக்கிறார்கள்.நீங்களே அங்கு போட்டியிடுங்கள்." என்றாராம் மஹிந்த..
அதன் பின் பிரசன்ன கூறிய சில காரணங்களை ஏற்றுக்கொண்ட மஹிந்த குருநாகலில் போட்டியிடுவதென்ற முடிவுக்கு வந்தார்.

வெளிமாவட்டத்தைச் சேர்ந்தோர்

# யாழ்.மாவட்டச் செயலகம் வருவதை தவிருங்கள்

மாவட்டச் செயலர் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஏப். 12**

**வெளி மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் யாழ். மாவட்டச் செயலகத்துக்கு வருவதைத் தவிர்த்து வீடுகளில் இருக்குமாறு யாழ்ப்பாண மாவட்டச் செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஊரடங்கு காரணமாக வேறு மாவட்டங்களிலிருந்து வருகை தந்து தற்பொழுது தமது சொந்த மாவட்டத்துக்குச் செல்ல முடியாது யாழ்ப்பாண மாவட்டத்தில் வசித்து வருபவர்கள் தாங்கள் வசித்து வரும் கிராம அலுவலர் மற்றும் அந்தப் பிரிவு பிரதேச செயலரிடம் பதிவை மேற்கொள்ளவும்.

வெளி மாவட்டங்களுக்குச் செல்வதற்கான அனுமதி தேசிய மட்டத்தில் வழங்கப்பட்டதன் பின்னர் அவர்களை அனுப்புவதற்கு உரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படும்.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கு ஒவ்வொரு நாளும் வெளி மாவட்டத்துக்குச் செல்வதற்கான அனுமதி கோரி பெருமளவில் மக்கள் வருவதை நாங்கள் அவதானிக்கின்றோம். மக்கள் தமது சிரமங்களைத் தவிர்த்துக் கொள்வதற்காக இந்த வேண்டுகோளை முன்வைக்க விரும்புகின் றேன், என்றார். (ஒ,5)

# எரிபொருளுக்கு தட்டுப்பாடு வரலாம்

யாழ்ப்பாணம், ஏப். 12

இலங்கையில் எரிபொருள் இறக்குமதியில் நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்படும் அச்சம் எழுந்துள்ளதாகவும் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் அதிகாரி மொஹமட் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் கொழும்பு ஊடகம் ஒன்றுக்குத் தெரிவித்ததாவது:

ஒரு ஆண்டுக்கு மொத்தமாக ஆயிரம் மெற்றிக்தொன் எரிபொருள் நாட்டுக்குத் தேவை. ஒவ்வொரு மாதமும் அல்லது இரண்டு மாதங்கள் இடைவெளியில் எரிபொருள் இறக்குமதி செய்யப்படும். இப்போதுள்ள பொருளாதார நெருக்கடியில் எரிபொருள் களஞ்சியப்படுத்தல் முறைமைகளில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

அத்துடன் 50 சதவீதமான எண்ணெய்ப் பயன்பாடு தடுக்கப்பட்டுள்ளது. ஏனெனில் வாகனங்களுக்கு வழங்க வேண்டிய எரிபொருள் பாவனைக்கு அப்பால் 40 சதவீதமான எரிபொருள் மின்சார உற்பத்திக்கு வழங்கவேண்டியுள்ளது. இப்போதுள்ள நிலையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படக் கூடிய நிலைமை உருவாகியுள்ளது.

எனவே மிதக்கும் களஞ்சியங்கள் இரண்டைக் கொண்டு வரத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதே போல் மாற்று வேலைத் திட்டங்களை முன்னெடுக்க வேண்டி திருகோணமலை எண்ணெய்க் குதங்களை இந்தியாவிடமிருந்து தற்காலிகமாகப் பெற்றுக் கொள்ள பேச்சு நடத்தப்படுகின்றது, என்றார்.

இது தொடர்பில் அமைச்சரவை இணைப் பேச்சாளர் பந்துல தெரிவித்ததாவது, எரிபொருள் தட்டுப்பாடு குறித்த அச்சம் உள்ளது. எரிபொருள் கப்பல்கள் இரண்டை இலங்கைக்கு வரவழைக்க அரசு தீர்மானித்துள்ளது. அதேபோல் எரிபொருள் களஞ்சியங்களையும் கையாளவேண்டும். இப்போதுள்ள களஞ்சியங்கள் போதுமானதாக இல்லை. திருகோணமலை எண்ணெய்க் குதங்களில் 20 குதங்களை இந்தியாவிடமிருந்து தற்காலிகமாகப் பெற்றுக் கொள்ளவது குறித்து இந்திய அரசிடம் பேச்சு முன்னெடுக்கப்படுகின்றது. அவற்றை தற்காலிகமாகப் பெற்றுக் கொண்டு எமக்குத் தேவையான எண்ணெய்க் களஞ்சியப்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றோம், என்றார். (ஒ,5)

# சுவிஸ் போதகர் குணமடைந்தார்

வீடியோ மூலமாக அவரே தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாணம் அரியாலையிலுள்ள பிலதெல்பியா தேவாலய ஆராதனையை நடத்திய சுவிஸிலிருந்து வந்த மதபோதகர் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்துள்ளார். அவரே இதனை காணொலி மூலமாகத் தெரிவித்துள்ளார். 'கர்த்தரின் மகிமையால் குணமடைந்தேன்' என்று அவர் அந்தக் காணொலியில் குறிப்பிட்டுள்ளார்.

அரியாலையில் கடந்த மாதம் 15ஆம் திகதி இடம்பெற்ற ஆராதனையில் சுவிஸிலிருந்து வந்த மதபோதகர் பங்கேற்றிருந்தார். கொரோனா தொற்று இருப்பது சுவிஸுக்கு அவர் திரும்பிய பின்னர் உறுதிப்படுத்தப்பட்டது. அவரைத் தனித்துச் சந்தித்துப் பேசிய தாவடியைச் சேர்ந்த கட்டட ஒப்பந்தகாரர் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டார். சுவிஸ் மதபோதகருடன் நெருங்கிப் பழகிய 6 பேருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் 24ஆம் திகதியிலிருந்து தொடர் ஊரடங்கு போடப்பட்டு வருகின்றது.

இந்த நிலையில் சுவிஸ் மதபோதகர், கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்துள்ளார். காணொலி மூலமாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தனக்காக பிரார்த்தித்தவர்களுக்கு நன்றியும் தெரிவித்துள்ளார். எனினும் தன்னால் கொரோனாத் தொற்றுக்குள்ளானவர்கள் பற்றி எவ்வித கருத்தையோ , அனுதாபத்தையோ வருத்தத்தையோ அவர் தெரிவிக்கவில்லை.

இதனையடுத்து சுவிஸ் மதபோதகருக்கு எதிரான கருத்துக்கள் சமூக வலைத் தளங்களில் அதிகமாகப் பகிரப்பட்டு வருகின்றன. (ஒ,5)

# மாஸ்க் கட்டாயம்! பொலிஸ் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 12

அத்தியாவசிய சேவைகளுக்காக அனுமதிக்கப்பட்ட அனைவரும் வீதிகளில் பயணிக்கும் போது முகக் கவசம் (மாஸ்க்) அணிவது கட்டாயம் என்று பொலிஸ் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை நேற்று முதல் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. முகக்கவசம் அணிவது கட்டாயமா அல்லது கட்டாய



மில்லையா என்று சுகாதார அமைச்சின் வேறுபட்ட அறிவிப்புகளால் குழப்பமிருந்த நிலையில் பொலிஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. (ஒ,5)

ஊரடங்கில் தொடரும் பயங்கரம்

# மானிப்பாயில் கத்திமுனையில் நேற்று அதிகாலை கொள்ளை

யாழ்ப்பாணம், ஏப். 12

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஊரடங்குச் சட்டம் நடைமுறையிலுள்ள நிலையிலும் இடம்பெறும் தொடர் கொள்ளைச் சம்பவங்களால் மக்கள் பீதியில் உறைந்துள்ளனர். அடுத்தடுத்து இரு நாள்கள் இடம்பெற்ற இந்தத் திகிலூட்டும் சம்பவங்களால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

உடுவில் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வீட்டில் நேற்று அதிகாலை 2 மணியளவில் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. வீட்டில் தனித்திருந்த 70 வயதுப் பெண்ணைக் கத்தி முனையில் மிரட்டி 7 பவுண் நகைகள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

வீட்டின் கதவை உடைத்து கொள்ளையர்கள் புகுந்துள்ளனர். முகத்தை மூடிக் கட்டியவாறு நுழைந்த கொள்ளையர்கள், மூதாட்டியின் கழுத்தில் கத்தியை வைத்து, அவரது வாய்க்குள் துணியை அடைந்து மிரட்டியுள்ளனர். கையிலிருந்த காப்பை அவர் கழற்றிக் கொடுத்துள்ளார். அதன் பின்னர் காதில் அணிந்திருந்த தோட்டையும் கழற்றிக் கொடுத்துள்ளார். இதன் பின்னர் அவரிடம், சங்கிலி எங்கே என்று கேட்டு மிரட்டியுள்ளனர். அதைத் தனது மகளிடம் கொடுத்துள்ளேன் என்று கூறியதும், சிறிது நேரம் அங்கு சல்லடை போட்டுத் தேடிய பின்னர் வெளியேறியுள்ளனர். சம்பவம் தொடர்பில் மானிப்பாய் பொலிஸாருக்கு நேற்றுக் காலை முறைப்பாடு செய்யப்பட்டது. பொலி



ஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இதேவேளை நேற்று முன்தினம் அதிகாலை மீசாலைப் பகுதியில் தனித்திருந்த வயோதிபத் தம்பதியரைத் தாக்கி நகைகள் கொள்ளையடிக்கப்பட்டிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ,5)

# நிவாரணங்களைக் கொடுப்பதில் கொழும்புக்கு முன்னுரிமை அளியுங்கள்

## மனோ கணேசன் வலியுறுத்து

கொழும்பு, ஏப்.12

கொழும்பு மாநகரம் தொடக்கம் தெகிவளை, மொரட்டுவை, கொலொன்னாவை நகரம் வரையாக பகுதிகள் கட்டடங்களின் காடுதான். இங்கே மரம், செடி, கொடி பயிர்கள் இல்லை. ஒரு கிண்ணம் தண்ணீரையும் விலை கொடுத்தே வாங்க வேண்டும். அதே போல் இங்கேதான் கொரோனா நோய் தாக்கமும் அதிகம். மக்கள் ஊரடங்கால் சிறைப்பட்டுள்ளர்கள். ஆகவே கொழும்பு மாவட்ட நகர பிரதேசங்களுக்கு வாழ்வாதார நிவாரணம் வழங்குவதில் முன்னுரிமை வழங்க வேண்டும் இவ்வாறு முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு மாவட்ட கொரோனா இடர் குழுக்கூட்டம், மாவட்டச்செயலகத்தில் நேற்று நடைபெற்றது. இதில் மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது: வாடகை வீடுகளில் வசிப்போரையும் எந்தவித பாகுபாடுமின்றி வாழ்வாதார நிவாரணம் பெறுவோர் பட்டியலில் சேர்க்கும்படி நான் கூறினேன். இவை கூட்டத்தில் அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கொழும்பு மாவட்டத்தில் வாழ்வாதார நிவாரணம் வழங்கப்பட வேண்டியவர்களாக 4 லட்சத்து 8 ஆயிரத்து 650 பேர் உள்ளனர் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதில் சமுர்த்தி பெறுநர் உட்பட ஒரு லட்சத்து 3ஆயிரத்து 788 பேருக்கே இதுவரையில் வாழ்வாதார நிவாரணம் வழங்கப்படுகிறது. ஏனையோரை அடையாளம் காணும் பணி நடைபெறுகிறது.

கொழும்பில் நிரந்தரமாக வசிக்கும், நாளாந்த தொழிலாளர், சுயமுதலீட்டாளர், கடை சிப்பந்திகள், வேலையில்லாதோர் என்ற அடிப்படைகளில் வாழ்வாதார நிவாரணம் பெற வேண்டியவர்களை அடையாளம் காணும் பணி நடைபெறுகிறது. இந்தப் பணிகள் கிராம சேவையாளர்கள் மூலம் நடைபெறுகிறன

கொழும்பில் நிரந்தரமாக வசிக்காத, வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 19ஆயிரத்து 428 இருக்கின்றார்கள் என கணிக்கப்பட்டுள்ளது. இவர்கள் வரும் 20ஆம் திகதி வரை கொழும்பில் தங்க வைக்கப்படுவார்கள். நோய்த் தொற்று தொடர்பில் முதல்நிலையாளர்களாக ஏற்கனவே அடையாளம் காணப்பட்டுள்ள, கொழும்பில் நிரந்தரமாக வசிக்கும் சுமார் 2ஆயிரம் பேர், இந்த வெளிமாவட்டகாரர்களும், முன்னுரிமை அடிப்படையில் மருத்துவ பரிசோதனைக்கு உள்ளாக்கப்படுவார்கள். நேற்று சீனாவில் இருந்த வந்த சோதனை கருவிகளை முன்னுரிமை அடிப்படையில் இவர்களை, சோதனை செய்ய பயன்படுத்துவதற்கு நாம் முடிவு செய்தோம்.

இதன் பின்னரே வெளிமாவட்டக்காரர்கள் சொந்த மாவட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவார்கள். இந்த நிலையில், வெளிமாவட்டக்காரர்கள் அண்மையில் உள்ள பொலிஸ் நிலையங்களில் பதிவு செய்யப்படுகிறார்கள். எந்த ஒரு பொலிஸ் நிலையத்திலும் இப்படியான பதிவுகள் மேற்கொள்வதில் சிரமம் ஏற்பட்டால், எம்மை தொடர்பு கொள்ளலாம்.

கொழும்பு நகரில், அத்தியாவசிய பொருள் விநியோகம் செய்வதற்காக, ஒவ்வொரு கிராம சேவகர்கள் பிரிவுகளிலும் குறிப்பிட்ட தனியார் கடைகளுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது என்று தெரிவித்தார். (து)



யாழ்ப்பாண பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கொட்டடி, சோனகதெரு தெற்கு கிராம அலுவலர் பிரிவுகளை உள்ளடக்கிய கற்குளம் பகுதியில் வசிக்கும் 142 குடும்பங்களுக்கு நியாஸ் காஜி யார் என்பவரால் 5 கிலோ அரிசி வீதம் வழங்கப்பட்டது. (ம)

# அள்ளி அள்ளிக் கொடுத்தாலும் திருப்திப்படாது விமர்சிப்பர்

## மக்களைச் சாடுகின்றார் ராஜாங்க அமைச்சர் விஜேசேகர

மக்களுக்கு எந்தளவுக்கு நிவாரணங்களை வழங்கினாலும் அவற்றில் அவர்கள் திருப்தியடையாது விமர்சிப்பார்கள் என முன்னாள் ராஜாங்க அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

தனது முகநூல் பக்கத்தில் அவர் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

"பல நிவாரணங்களைப் பெறும் நபர்கள் தமக்கு கிடைத்த நிவாரணங்கள் குறித்து எப்போதும் யாரிடமும் கூறுவதில்லை. கிடைத்தது தொடர்பாகவும் மகிழ்ச்சியடைவதில்லை. வேறு ஒருவருக்கு அந்த நிவாரணம் கிடைத்தாலும் மகிழ்ச்சியடையமாட்டார்கள். தம்மிடம் எவ்வளவு இருந்தாலும் மற்றவருக்கு ஏதேனும் கிடைத்தால், அது தமக்கும் வேண்டும் என்று விமர்சிப்பார்கள். எவ்வளவு நிவாரணங்களை வழங்கினாலும் எந்த விதத்தில் வழங்கினாலும் அரசுக்கும் அதிகாரிகளுக்கும் விமர்சனம் மாத்திரமே எஞ்சும். இதனைப் புரிந்துக்கொண்டு பணியாற்ற வேண்டுமே அன்றி மாற்று வழியில்லை" என்று பதிவிட்டுள்ளார்.

மாத்தறை மாவட்டத்தில் மக்களுக்கு நிவாரணங்களை வழங்கும் நடவடிக்கைகள் முற்றிலும் அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளன என்றும் இது ஜனாதிபதி மற்றும் அரசுக்கு ஏற்பட்டுள்ள அவப்பெயர் என்றும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் மாத்தறை மாவட்ட தலைவரும் அமைச்சருமான டளஸ் அழகப்பெரும கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்த நிலையிலேயே காஞ்சன விஜேசேகர தனது முகநூலில் மேற்கண்ட கருத்தைப் பதிவிட்டுள்ளார். (து)

# கடமைகள் பொறுப்பேற்பு

யாழ்ப்பாணம், ஏப்.12

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன், தனது கடமைகளுக்கு மேலதிகமாக, யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராகவும் நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார். அதேபோன்று மருத்துவர் குமாரவேல், பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளராக நேற்றுப் பொறுப்பேற்றுக் கொண்டார்.

யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஏ.தேவநேசன் ஊர்காவற்றுறை மருத்துவமனையின் அத்தியட்சகராக திடீரென இடமாற்றம் செய்யப்பட்டிருந்தார். கொரோனா ஒழிப்பு நடவடிக்கையில் ஒத்துழைக்கவில்லை என்ற குற்றச்சாட்டு அவர் மீது முன்வைக்கப்பட்டிருந்தது.ஆயினும் தேர்தல் காலத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டமை தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம், தேவநேசன் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,105)

# கல்வித் துறையை இன்னும் வலுவாக்க நிபுணர்களின் ஆலோசனை அவசியம்!

## இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவிப்பு

வைரஸ் பரவல் காரணமாக பாதிப்புக்குள்ளாகியுள்ள கல்வித்துறை தொடர்பில் அரசாங்கத்தால் மேலும் வலுவான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும். அத்தோடு புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சை என்பவற்றை நடத்துவது தொடர்பிலும் ஆராய வேண்டும் என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது; கொரோனா வைரஸ் பரவலுக்கு மத்தியில் பல்வேறு துறைகள் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் கல்வித்துறையும் பாரியளவில் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே பாடசாலை மாணவர்கள் முதல் பல்கலைக்கழக மாணவர்கள் வரை அனைவர் தொடர்பிலும் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. இதற்காக கல்விமான்களின் கல்வித் துறைசார் அதிகாரிகளின் ஆலோசனை பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்பதே எமது நிலைப்பாடாகும். இந்தச் சந்தர்ப்பத்தில் புலமைப்பரிசில் பரீட்சை மற்றும் உயர்தரப் பரீட்சைகள் உரிய நேரத்தில் நடத்தப்படும் என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். எனினும்தற்போதைய சூழல் எப்போது நிறைவடையும் என்பது தொடர்பில் யாராலும் உறுதியாகக் கூற முடியாது. இம்மாத இறுதியில் கல்விநடவடிக்கைளை ஆரம்பிக்க முடியும் என்று நாம் எண்ணவில்லை. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது இறுதித் தவணையை நிறைவு செய்திருக்க வேண்டும். இவ்வாறான விடயங்களை கருத்திற்கொண்டு அரசாங்கம் செயற்பட வேண்டும். அத்தோடு விடுமுறை தினங்களில் மாணவர்கள் தவறான பாதையில் சென்றுவிடாது கல்வி நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபாட்டுடன் செயற்படுவதற்கான வழிமுறைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும் - என்றார். (ப)

# சீனாவிலிருந்து மருந்து கட்டுநாயக்காவில் வந்திறங்கியது

கொழும்பு, ஏப்.12

கொரோனா வைரஸுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு உதவும் வகையில், சீன அரசால் இலங்கைக்கு ஒரு தொகை மருத்துவப் பொருள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

இதற்கமைய, சுமார் 9 ஆயிரம் கிலோகிராம் நிறையுடைய மருத்துவப் பொருள்கள், சீன அரசால் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. சீன விமானச் சேவைக்குச் சொந்தமான விமானமொன்றின் ஊடாக, நேற்று முன்தினம் இரவு இந்தப் பொருள்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

முக உறைகள்,கைக் கவசங்கள் மற்றும் உடற்பாது காப்புக் கவசங்கள் உள்ளிட்ட பல்வேறு பொருள்கள் இவ்வாறு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது. (ப)

# கொரோனாவுக்கு எதிரான கொடைகள்



## வறுமைக்குட்பட்ட குடும்பங்களுக்கு உணவுப் பொதி!

கிளிநொச்சி, ஏப்.12
சமூக செயற்பாட்டாளர் சோபா மற்றும் புலம்பெயர் தேசத்தில் உள்ள அவரது உறவினர்களின் நிதியுதவியில் கிளிநொச்சியில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
கிளிநொச்சி மாவட்டத்தின் கணேசபுரம், உருத்திரபுரம் வடக்கு, திருநகர் தெற்கு, சாந்தபுரம், பாரதிபுரம், அறிவியல்நகர் போன்ற கிராமங்களில் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே இந்த உலர் உணவுப் பொதிகள் சமூக செயற்பாட்டாளர் சோபாவால் வழங்கப்பட்டன. முதற்கட்டமாக 25 குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம)

## அணைக்கும் கரங்கள் அமைப்பால் உதவிகள்

முல்லைத்தீவு, ஏப். 12
முல்லைத்தீவு குமுளமுனை கிராமத்தில் அமைந்துள்ள அணைக்கும் கரங்கள் அமைப்பினால் முல்லைத்தீவு குமுழமுனையில் நான்கு கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை வழங்கி வைக்கப்பட்டன.
முல்லைத்தீவு குமுழமுனை மேற்கு, குமுழமுனை மத்தி, குமுழமுனை கிழக்கு, தண்ணிமுறிப்பு ஆகிய பகுதிகளில் வசிக்கும் 103 குடும்பங்களுக்கு ஆயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ம-159)

### கனேடிய உறவுகளால்

## 100 குடும்பங்களுக்கு உணவுகள் வழங்கல்

**யாழ்ப்பாணம், ஏப். 12**

**கனேடிய உறவுகளின் நிதி உதவியில் வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேசெயலர் பிரிவுக்குட்பட்ட அந்திரான், நொத்தாரிசு தோட்டம் ஆகிய இடங்களில் வசிக்கும் சுமார் 100 குடும்பங்களுக்கு உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.**



தினசரி கூலி வேலை மூலம் கிடைக்கும் வருமானத்தில் தமது வாழ்வாதாரத்தை முன்னெடுத்து வந்த இப்பகுதி மக்கள் கொரோனா அச்சுறுத்தல் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதையடுத்தே இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.
கனடாவில் செயற்பட்டுவரும் நம் உறவுக்கு நாமே கைகொடுப்போம் என்ற தன்னார்வ அமைப்பின் ஊடாக கனேடிய உறவுகள் சேகரித்து அனுப்பிய மூன்று இலட்சம் ரூபா நிதியில் தலா மூவாயிரம் ரூபா பெறுமதியுடையவையாக அந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
கரணவாய் மேற்கு கிராம சேவகர் பிரிவிற்குட்பட்ட அந்திரான் கிராமத்தில் தெரிவு செய்யப்பட்ட 15 பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் உள்ளிட்ட 85 குடும்பங்களுக்கும், நொத்தாரிசு தோட்டம் கிரதுத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 குடும்பங்களுக்கும், அக்கிராம சேவகர் பிரிவில் தற்காலிகமாகத் தங்கியிருக்கும் வெளிமாவட்டங்களைச் சேர்ந்த 5 குடும்பங்களுக்கும் என நூறு குடும்பங்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. 10 கிலோ அரிசி, 5 கிலோ மா, 4 கிலோ பருப்பு, 4 கிலோ சீனி உள்ளிட்டதாக அந்தப் பொதிகள் அமைந்துள்ளன. (ம)



## வாழைச்சேனையில் சௌபாக்கியா

மட்டக்களப்பு, ஏப்.12
ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கமைய ஆரம்பிக்கப்பட்டுள்ள பத்து இலட்சம் வீட்டுத் தோட்டத்தை உருவாக்கும் 'சௌபாக்கியா வீட்டுத் தோட்ட' பணிகள் வாழைச்சேனை கமநல சேவைகள் திணைக்களத்தால் கடந்த வியாழக்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.
வாழைச்சேனை கமநல சேவைப் பிரிவில் உள்ள மூன்று பிரதேச செயலாளர் பிரிவுகளில் முதற்கட்டமாக ஐந்நூறு குடும்பங்களுக்கு சௌபாக்கியா வீட்டுத் தோட்டத்துக்கான கத்தரி, மிளகாய், புசித்தாய், வெண்டி, போஞ்சி போன்ற ஐந்து வகை பயிர்களுக்கான விதைகள் வழங்கப்பட்டன. அத்துடன் பழமரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.
வாழைச்சேனை கமநல அபிவிருத்தித் திணைக்கள பிரதேச உத்தியோகத்தர் எம்.ஏ.ரஷீட் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் திருமதி.நிஹாரா மௌஜூத், வாழைச்சேனை பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் ஆகியோர் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பழமரக் கன்றுகளையும், மக்கறி வகைகளின் விதைகளையும் வழங்கினர். (ட-150)

## ஊரடங்கால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உணவுகள்

சாவகச்சேரி, ஏப். 12
ஊரடங்குச் சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ள சில குடும்பங்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தால் உலர் உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன.
புலம்பெயர் நாடொன்றில் வசிக்கும் நபரொருவரின் நிதியுதவியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட உணவுப்பொதிகள் கோயிற்குடியிருப்பு தரைப்பகுதி, சங்கத்தானை, நுணாவில், கல்வயல் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 100க்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.
கழகத் தலைவர் லயன் து. இளங்குமரன் தலைமையில் கழக உறுப்பினர்கள் வீடுவீடாகச் சென்று உதவிப் பொருள்களை வழங்கினர். (ம-9)





## தென்மராட்சி மக்களுக்கும் அத்தியாவசியப் பொருட்கள்

தென்மராட்சி, ஏப். 12
தென்மராட்சியின் சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.
முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர் பா. கஜதீபன் ஆகியோரின் அறிவுறுத்தலுக்கமைய செரண்டிப் சிறுவர் இல்லத்தினால் யாழ் மாவட்டம் முழுவதும் வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கு அத்தியாவசிய உலர் உணவுப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் தென்மராட்சியின் சாவகச்சேரி நகரசபைக்கு உட்பட்ட பகுதிகளில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கே இவ் அத்தியாவசிய பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன. (ம-20)

## வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தால் 2,000 குடும்பங்களுக்கு உணவுப்பொதிகள்

வவுனியா, ஏப்.12
வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தினால் 2000 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன.
நெடுங்கேணி, புளியங்குளம், கனகராயன்குளம் ஆகிய பிரதேசத்தை சேர்ந்த குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு நெடுங்கேணி பிரதேச செயலாளர் இ. பிரதாபனின் வேண்டுகோளுக்கு இணங்க இந்த உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.
உறவினர்களுடன் தங்கி வாழும் சிறுவர்களுக்கும் பால்மா பைக்கற்றுகளும் உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. (ம)





# கொரோனாவுக்கு எதிரான கொடைகள்!



கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் அனுசரணையுடன், கிளாலி மற்றும் அரசர்கேணி கிராமங்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன.
பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும், வறுமைக்கோட்டுக்கு கீழ்ப்பட்ட நிலையில் வாழும் குடும்பங்களுக்கும் உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. ஜேர்மனியைச் சேர்ந்த இ. இரவீந்திரகுமார் தனது தந்தையார் நினைவாக வழங்கிய நிதியில் இந்தப், பொதிகள் வழங்கப்பட்டன. கல்வி பொருளாதார அபிவிருத்தி அமைப்பின் பணிப்பாளர் இ.தயாபரன், சாவகச்சேரிப் பிரதேச சபையின் உபதவிசாளர் மயூரன், சமூக செயற்பாட்டாளர் மா.சிவராசா ஆகியோர் பொதி களை வழங்கினர். (க-22)



கொரோனா வைரஸ் பாதிப்பை அடுத்து வாழ்வாதா ரத்தை இழந்து வாழும் வறுமைக்கோட்டுக்கு உட்பட்ட மக்களுக்கான உதவிகள் வழங்கும் செயற்பாடு நேற்று முன்தினம் அராலியில் இடம்பெற்றது. இதற் கான ஒழுங்கமைப் சமூக சேவகர் சன்.லவக்குமார் தலைமையிலான ஸ்ரீ முருகன் இளைஞர் அணி யால் முன்னெடுக்கப்பட்டது. இவ் உதவித்திட்டம் சங்கானை இந்து இளைஞர் மன்றத்தின் 13 லட்சத்து 25ஆயிரம் ரூபா பெறுமதியில் வழங்கப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ப)



முள்ளியவளை தண்ணீரூற்று பகுதியில் அமைந் துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தால் 350 குடும் பங்களுக்கு உலர் உணவுப்பொதிகள் வழங்கப் பட்டன.
கொரோனா வைரஸ் பரவுவதை தடுக்க எடுக்கப்பட் டுள்ள சட்ட நடவடிக்கை காரணமாக முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேசத்துக்குட்பட்ட அரச நிவாரணம் பெறாத குடும்பங்கள் 350 பேருக்கே நேற்றுமுன்தினம் இவ்வாறு உணவுப் பொருள்கள் வழங்கப்பட்டன. புதறிகுடா, முள்ளிய வளை மத்தி, தெற்கு, கிழக்கு, மாமூலை, கணுக் கேணி மேற்கு, தண்ணீரூற்று கிழக்கு ஆகிய கிரா மங்களைச் சேர்ந்த வறுமைகோட்டின் கீழான குடும் பங்கள் இந்த உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டன. (ப-19)





சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினால் இலங் கையின் பல பகுதிகளிலும் நிவாரணப் பொருட்கள் வழங்கி வைக்கப்படுகின்றன. அதன் ஒரு பகுதியாக யாழ்ப்பாணத்தில் பண்டத்தரிப்பு, புத்தூர், மல்லாகம், அராலி, அளவெட்டி, ஆனைக்கோட்டை ஆகிய பகு திகளில் வசிக்கும் மக்களுக்கான நிவாரணப் பொருட் கள் இவ்வாரம் வழங்கி வைக்கப்பட்டன. (ம)





வேலணைப் பிரதேசசபையின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் தமது மாதாந்தச் சம்பளக் கொடுப்பன விலிருந்து நிதிப்பங்களிப்பில் 'அரச பணியாளர் சவால்' என்ற பெயரில் கொறொனா இடர் நிவாரணப் பணி செயற்றிட்டம் ஒன்றினை முன்னெடு த்துள்ளனர்.





கொரோனாவால் எழுந்துள்ள அசாதார சூழ்நிலையை அடுத்து, உணவுத்தேவையை பூர்த்தி செய்ய முடியா மல் தவிக்கும் மக்களைத் தேடி உணவுப் பொருட்கள் அடங்கிய பொதிகள் அன்புபுரம் குருபரன்வீதி உள்ள டங்கலாக முழங்காவில் (50 பொதிகள்) பகுதிகளுக்கும், பொன்னாவெளி கிராமசேவகர் பிரிவுக்குட்பட்ட வேரவில், பொன்னாவெளி, வலைப்பாடு போன்ற பகுதிகளுக்குமாக (66 பொதிகள்) மொத்தமாக 116 பொதி கள் கிளிநொச்சி மக்கள் அமைப்பினரின் அன்பளிப்பாக மக்களின் வீடுவீடாகச் சென்று கையளிக்கப்பட்டன.



சங்கானை பட்டின சபையின் ஏற்பாட்டில், புலம்பெ யர் நாட்டில் வசிக்கும் நபரின் நிதி உதவியுடன் உள் ளூர் உற்பத்தியாளர்களால் தயாரிப்பில் மாஸ்க் தயாரிக்கப்பட்டு சங்கானை பிரதேசத்தில் கொரோனா தடுப்பு மற்றும் விழிப்புணர்வு நடவடிக் கையில் ஈடுபடும் அரச பணியாளர்களுக்கு தற் போது வழங்கப்படு வருகிறது.
சங்கானை வைத்தியசாலையின் பொறுப்பு வைத் திய அதிகாரி மற்றும் சுகாதார வைத்திய அதிகாரி ஆகியோரின் மேற்பார்வையில் பொதுச் சுகாதார பரிசோதகரின் ஆலோசனைகளுக்கு அமைவாக இந்த மாஸ்க் தயாரிக்கப்பட்டு இலவசமாக வழங்கப் பட்டு வருகிறது. இதுவரை சுமார் 600க்கும் மேற் பட்ட மாஸ்க் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. (ம-7)



லண்டன் வாழ் திலீபன் கந்தப்பிள்ளையின் நிதி அனுசரணையில் முல்லை மறுமலர்ச்சிக் கழகத்தி னரால் முல்லைத்தீவு முள்ளியவளை, ஐயன் குடி யிருப்பு, பொன்னகர் 50 வீட்டுத்திட்டம் வற்றாப் பளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த குடும்பங்கள் சிலவற்றுக்கு 5 கிலோ அரிசி 5 கிலோ மா அடங்கிய உலர் உணவுப்பொதிகள் வழங்கப்பட்டன. (ம-222)

## கொரோனாவை வென்றுள்ளது நியூசிலாந்து!

வெலிங்டன், ஏப். 12
கொரோனா வைரஸ் தொற்றுக்கு எதிரான போரில் வெற்றிபெற்றுக் கொண்டிருக்கிறோம். விரைவில் ஊரடங்கு உத்தரவை திரும்பப் பெறுவோம் என நியூசிலாந்து பிரதமர் தெரிவித்துள்ளார்.

கொரோனாவுக்கு எதிரான நடவடிக்கையை ஜனவரி 22ஆம் திகதி முதல் முன்னெடுத்து வருகின்றது நியூசிலாந்து. ஊரடங்கு உத்தரவுகள், அதிகளவான பரிசோதனைகள் என்று நியூசிலாந்தின் நடவடிக்கை தொடர்ந்தது.

இந்த நிலையில் கொரோனாவின் பரவலைக் கட்டுப்படுத்தியுள்ளோம் என்று நியூசிலாந்து நேற்று அறிவித்தது.

நியூசிலாந்தில் கொரோனா வைரஸ் தொற்று காலடி எடுத்து வைத்ததில் இருந்து ஆறு வாரங்களுக்குள் அதை முறியடித்துள்ளோம். கொரோனா பரவல் சங்கிலியை உடைத்துள்ளோம் என்று நியூசிலாந்து பிரதமர் தெரிவித்தார். (ம)

# தடுப்பூசியை நேற்று சோதித்தது சீனா!

*பீஜிங், ஏப்ரல் 12*

*கொரோனாவுக்கு எதிரான தடுப்பூசியை நேற்றுச் சோதித்தது சீனா. 108 தன்னார்வலர்களுக்கு முதல் கட்டமாக இந்தத் தடுப்பூசி செலுத்தப்பட்டது.*



சீனாவின் வுகான் நகரில் கடந்த வருடம் இறுதிப் பகுதியில் கொரோனா வைரஸ் இனங்காணப்பட்டது. மனிதர்களில் இருந்து மனிதர்களுக்குப் பரவும் இந்த வைரஸ் உலகின் 210 நாடுகளுக்குத் தற்போது பரவியுள்ளது.

சுமார் 17 லட்சம் பேருக்கு அதிகமானோர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமானவர்கள் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். அமெரிக்கா, ஸ்பெயின், பிரான்ஸ், ஜேர்மனி, பிரிட்டன், இத்தாலி உள்ளிட்ட பொருளாதார வல்லரசுகளே கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த வைரஸுக்குத் தடுப்பூசியைக் கண்டுபிடிப்பதற்கு உலக நாடுகள் பலவும் தற்போது கடும் முனைப்புக் காட்டியுள்ளன. இந்த நிலையில் சீன அரசு தடுப்பூசியை உருவாக்கி நேற்று முதல் கட்டமாக 108 பேருக்கு அதைச் செலுத்திச் சோதித்துள்ளது. எதிர்வரும் வியாழக்கிழமை இரண்டாவது கட்டமாக 500 தன்னார்வலர்களுக்கு தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பூனைகளுக்கும் கொரோனா சீன ஆய்வில் தெரியவந்தது

பீஜிங், ஏப். 12
பூனைகளுக்கும் கொரோனாத் தொற்று ஏற்பட்டிருப்பது சீன ஆய்வில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா மனிதர்களில் இருந்து மனிதர்களுக்கு மட்டுமே பரவும் என்று டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி சீனா அறிவித்தது. எனினும் அமெரிக்காவில் புலியொன்றுக்குக் கொரோனா தாக்கம் ஏற்பட்டிருப்பது ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. இதையடுத்து சீனாவில் மேற்கொண்ட ஆய்வில் பூனையொன்றுக்குக் கொரோனா தாக்கம் ஏற்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (ம)

## ஊரடங்கை விலக்கினால் கொரோனா எழுச்சிபெறும்

*உலக சுகாதார அமைப்பு எச்சரிக்கை*

லண்டன், ஏப். 12
கொரோனாவை அழிக்கும் முன்னர் ஊரடங்கை நீக்கிக் கொண்டால் கொரோனா மீண்டும் எழுச்சி பெறும் என்று தெரிவித்துள்ளது உலக சுகாதார அமைப்பு.

இது தொடர்பில் அந்த நிறுவனம் விடுத்துள்ள எச்சரிக்கைக் குறிப்பில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

லாக்டவுனை நீக்கும் முன் உலக நாடுகள் கவனம் செலுத்த வேண்டிய 6 முக்கிய விடயங்களை கவனத்தில் கொள்ள வேண்டும். முதலாவதாகப் பரவலைக் கட்டுப்படுத்தி இருக்க வேண்டும், இரண்டாவதாக மக்களுக்கு போதுமான அளவு பொதுச்சுகாதாரச் சேவையை தயாராக வைத்திருக்க வேண்டும், மூன்றாவதாக வைரஸ் பாதிப்பில் சிகிச்சை பெறுவருபவர்கள் எண்ணிக்கை குறைந்திருக்க வேண்டும், நான்காவதாக பணியிடங்களிலும், பள்ளி, கல்லூரிகளில் தடுப்பு நடவடிக்கைகள் இருக்க வேண்டும், ஐந்தாவதாக வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த வெளிநாடுகளில் இருந்து வருபவர்களை சரியாக சோதனைக்கு உட்படுத்தும் வழிகளை கையாள வேண்டும், ஆறாவதாக அனைத்து மக்களுக்கும் விழிப்புணர்வு விஷயங்களையும், கொரோனா குறித்த விழிப்புணர்வு பிரச்சாரமும் சென்றசேர்ந்திருக்க வேண்டும். இவை அனைத்தையும் முழுமையாகச் செய்த பின்புதான் கட்டுப்பாடுகளைத் தளர்த்த முடிவு செய்ய வேண்டும் என்றார். (ம)

முதலாம் பக்கத் தொடர்ச்சி....

### விஸ்வரூபம்...

இது தொடர்பில் கொழும்பு சுகாதார அமைச்சே முடிவு எடுக்கும். இதுவரையில் (நேற்றுஇரவு) அவர்களிடமிருந்து இது தொடர்பில் எந்த முடிவும் கிடைக்கவில்லை' என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் வடக்கு மாகாண இணைப்பாளர் த.காண்டீபன் நேற்று விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையிலிருந்து, அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கிளை நேற்று முன்தினம் எமக்கு அனுப்பிய கடிதத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோய்க்கு மக்களுக்கு சிகிச்சையளிக்க பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அத்தியட்சகர் ஒத்துழைக்க மறுப்பதாலும் அத்தியட்சகராக பதவிக்கு வந்த காலம் முதல் அவரது நிர்வாகச் சீர்கேடுகள் உள்பட பல முறைப்பாடுகளை எமக்கு கடிதம் மூலமாக தெரிவித்திருந்தனர். இவர் மீது பக்கச்சார்பற்ற விசாரணையை ஆரம்பிக்குமாறும், கொரோனா அபாயம் நீங்கும் வரை அத்தியட்சகரை பணியில் இருந்த நீக்கி வேறு ஒருவரை புதிதாக நியமிக்கமாறும் கோரியிருந்தனர்.

அத்தியட்சகரின் ஏற்றுக்கொள்ள முடியாத மற்றும் பொறுப்பற்ற நடத்தை காரணமாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் ஏற்பட்ட நெருக்கடி நிலைமை குறித்து ஆராய்ந்த அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழு நிலைமையை கவனமாக மதிப்பீடு செய்த பின்னர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய கலாநிதி அனில் ஜாசிங்கவுக்கு கடிதம் அனுப்பியிருந்தது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பருத்தித்துறைக் கிளையின் கடிதத்தில் குறிப்பிட்ட முறைப்பாடுகளை அடிப்படையாக கொண்டு, அத்தியட்சகருக்கு எதிராக பக்கச்சார்பற்ற விசாரணையைத் தொடங்கவும் விசாரணை முடிவடையும் வரையில் அவரை தற்காலிகமாக அகற்றி அவர்களுக்குப் பதிலாக உரிய மருத்துவ நிர்வாகியை நியமனம் செய்யுமாறு சுகாதாரத் துறை அதிகாரிகளுக்கு வலியுறுத்துமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

அந்தக் கடிதத்தில் இவர் பதவியிலிருந்து இன்று அல்லது அதற்கு முன் நீக்கப்படாவிட்டால் பருத்தித்துறை மருத்துவமனையின் சேவைகளை தொடர்ந்து மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படும் என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் மருத்துவர்கள் இன்று புதிதாக பதவியேற்ற பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரனுக்கு அனுப்பிய கடிதத்தில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் நிறைவேற்று க்குழுவின் பரிந்துரைக்கமைய மருத்துவர் த.குகதாசனை பதவியில் இருந்து அகற்றி புதிய மருத்துவ நிர்வாகியை நியமனம் செய்யுமாறும் இல்லையேல் கால அவகாசம் முடிவடைந்ததும் தொழிற் சங்க போராட்டத்தில் ஈடுபட வேண்டி வரும் என்றும் தெரிவித்துள்ளதாக, ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஒ,5,20)

### ஆணின்...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார். சடலம் அடையாளம் காணப்படவில்லை.


இவர் கடந்த 5 மாத காலம் முனியப்பர் கோயில் பகுதியில் யாசகம் பெற்று வந்தவர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

மீட்கப்பட்ட சடலம் தற்போது யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. (க26,105)

# அடுத்த வருடமும் ஒலிம்பிக் சந்தேகம் இப்படிச் சொல்கின்றது ஜப்பான் அரசு!

டோக்கியோ, ஏப். 12
ஓர் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒலிம்பிக் தொடர் அடுத்த வருடம் நடைபெறும் என்று உறுதியாகக் கூறமுடியாதுள்ளது என்று தெரிவித்துள்ளார் டோக்கியோ ஒலிம்பிக் சம்மேளனத்தின் தலைவர்.
ஜப்பானின் டோக்கியோ நகரில் இந்த வருடம் மத்திய பகுதியில் ஒலிம்பிக் தொடர் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக கனடா, ஆஸ்திரேலிய நாடுகள் தங்கள் நாட்டு அணிகளை ஜப்பானுக்கு அனுப்ப மறுத்தன. இதே கருத்தை ஏனைய நாடுகளும் வலியுறுத்தியதை அடுத்து ஓராண்டுக்கு ஒலிம்பிக் தொடர் பிற்போடப்பட்டது. இந்த நிலையில் அடுத்த வருடம் ஒலிம்பிக் நடைபெறும் என்று உறுதியாகக் கூறமுடியாதுள்ளது என்றுள்ளார் டோக்கியோ ஒலிம்பிக் சம்மெளனத்தின் தலைவர்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
கொரோனா வைரஸ் தொற்றை அடுத்த வருடம் ஜூலை மாதத்துக்குள் முற்றிலுமாக கட்டுக்குள் கொண்டுவந்திட முடியும் என்று எவரும் உறுதியாகச் சொல்லவில்லை. உறுதியான நிலையில் இருந்து தெளிவான பதிலை எங்களால் கொடுக்க முடியவில்லை. ஒரு வருடத்துக்குத் தொடரை ஒத்தி வைத்துள்ளோம். ஆகவே, அடுத்த வருடம் போட்டி நடைபெறுவதற்கான வேலைகளை கடுமையான வகையில் செய்ய முடியும். அடுத்த வருடத்திற்குள் இந்தக் கொடிய வைரஸை மனித இனம் வெற்றிக் கொள்ளும் என நம்புகிறோம் என்றார். (ம)






# இந்திய வீரர்களின் ஊதியம் பிடித்தமா?


புதுடெல்லி, ஏப். 12
இந்திய கிரிக்கெட் வீரர்களின் ஊதியத்தில் பிடித்தம் என்ற பேச்சுக்கே இடமில்லை என்று இந்தியக் கிரிக்கெட் சபையின் அதிகாரியொருவர் தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
மார்ச் 24ஆம் திகதியில் இருந்து ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. எந்தவிதமான முடிவு வந்தாலும் பிசிசிஐ அதை எதிர்கொள்ளத் தயாராக இருக்கிறது.
மத்திய ஒப்பந்த வீரர்களுக்கான காலாண்டுத் தொகை அவர்களுக்குக் கிடைத்தே தீரும். மேலும் போட்டிக்கான தொகை இந்தியா, இந்தியா 'ஏ' அணிகளுக்கான விளையாடிய வீரர்களுக்கு வழங்கப்படும். நிதி வருடத்திற்குள் இந்த தொகைகள் வீரர்களுக்கு சென்றடையும்" என்றார். (ம)

# 5,000 பேருக்கு சச்சினால் உணவு

புதுடெல்லி, ஏப். 12
கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ள சமார் 5 ஆயிரம் பேருக்கு ஒரு மாதகாலம் உணவளிக்க ஏற்பாடுகளைச் செய்துள்ளார் இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின்.
கொரோனா வைரஸ் காரணமாக இந்தியாவில் 21 நாள்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஊரடங்கால் அன்றாட கூலித் தொழிலாளர்களே அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் அவ்வாறான 5 ஆயிரம் பேருக்கு அடுத்த ஒரு மாத காலத்துக்கு உணவளிப்பதற்கு முடிவெடுத்துள் ளார் சச்சின். இந்திய அணியின் முன்னாள் தலைவர் கங்குலி தினமும் 10 ஆயிரம் பேருக்கு உணவளித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பார்சிலோனா எனது கழகம்

## வெளியேறுகின்றேன் என்ற தகவலில் உண்மையில்லை என்கிறார் மெஸ்ஸி



மட்ரிட், ஏப். 12
பார்சிலோனாதான் எனது கழகம். பார்சிலோனாவில் இருந்து நான் விலகுகின்றேன் என்று வெளிவரும் தகவலில் உண்மை இல்லை - என்று தெரிவித்துள்ளார் ஆர்ஜென்ரீனா தேசிய அணியின் தலைவரும், பார்சிலோனா கழகத்தின் தலைவருமான மெஸ்ஸி.
மெஸ்ஸி அடுத்த பருவகாலத்தில் ஆர்ஜென்ரீனாவில் இருந்து விலகி, இத்தாலியின் இன்டர் மிலன் கழகத்துக்காக ஒப்பந்தமாகவுள்ளார் என்று அண்மைக்காலமாக தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் இது தொடர்பில் மெஸ்ஸி மேலும் தெரிவித்ததாவது:
நான் பார்சிலோனாவை விட்டு வெளியேற மாட்டேன். இது எனது கழகம். இவ்வாறான பொய்களை உரைப்பதில் சிலர் கைதேர்ந்தவர்களாக இருந்து விடுகின்றார்கள். அணிமாறுகை தொடர்பில் வெளிவந்த தகவலில் எந்த உண்மையும் இல்லை. ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் நானே அதை அறிவிப்பேன் என்றார். (ம)



# கால்பந்தாட்டங்களை தொடங்க வேண்டாம்

## இன்பான்டினோ அறிவுரை

மட்ரிட், ஏப். 12
கொரோனா வைரஸின் தாக்கம் முழுமையாகச் சீராகும் முன்னர், அவசரப்பட்டு கால்பந்தாட்டங்களைத் தொடங்க வேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளார் சர்வதேச கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் இன்பான்டினோ.
இது தொடர்பில் இன்பான்டினோ மேலும் தெரிவித்ததாவது:
கால்பந்தாட்டத் தொடர்களை அவசரப்பட்டு தொடங்கிவிடக் கூடாது. கால்பந்தாட்டங்களுக்காக மனித உயிர்களை ஆபத்தில் சிக்கவைக்கக் கூடாது. இது முட்டாள்தனமான செயலாக ஆகிவிடும். மனித உயிரைவிட விளையாட்டு பெரிது கிடையாது. அதுதான் எங்களது முன்னுரிமை, நோக்கம். நிலைமை 100 சதவீதம் பாதுகாப்பாக இல்லாதபட்சத்தில் போட்டிகளை மறுபடியும் தொடங்கினால் அது மிகவும் பொறுப்பற்ற செயலாகிவிடும். இன்னும் சிறிது காலம் காத்திருக்க வேண்டும் - என்றார். (ம)

# நீண்ட ஓய்வு கூடாது சன்டீப் சர்மா கவலை

நீண்டகாலம் ஓய்வில் இருப்பது ஆட்டத்திறனைப் பாதிக்கும் என்று தெரிவித்துள்ளார் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் சன்டீப் சர்மா.
கொரோனா காரணமாக வீட்டுக்குள்ளேயே முடங்கியுள்ளோம். இது வீரர்களின் ஆட்டத்திறனைப் பாதிக்கும். கொரோனா முடிந்த பின்னர் இயல்பு நிலைக்குத் திரும்பி பயிற்சிகளை மேற்கொள்ள அவகாசம் தேவை - என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 12.04.2020 இல் வெளியிடப்பெற்றது.